270

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



செய்திகள்

மின்னணு ரெயில்கள்

டிரைவர் யாருமே இல்லாமல் தானே இயங்கிச் செல்லக்கூடிய ரெயில் எஞ்சின் ஒன்றை ரஷ்ய விஞ்ஞானிகள் சமீபத்தில் ஓட்டிப் பார்த்தார்கள். இந்த எஞ்சினை மின்னணுக்கள் அடங்கிய கருவி ஒன்று கணக்குப் பிசகாமல் இயக்குகிறதாம்.

காந்தி கிராமத்தில் நேரு

மதுரைக்கும் திண்டுக்கல்லுக்கும் இடையே அமைந்துள்ள காந்தி கிராமத்துக்குச் சமீபத்தில் இந்தியப் பிரதமர் நேரு விஜயம் செய்தார். ஆயிரத்துக்கும் மேலான மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் தங்கி, கல்வி பயின்று பயிற்சி பெற்று உற்பத்தியும் செய்து வருகிறார்கள் இங்கே. இந்தக் கிராமத்தின் பத்தாவது ஆண்டு விழாவை ஒட்டி விஜயம் செய்த நேரு இங்கே கஸ்தூரிபா ஆஸ்பத்திரியின் புதுக் கட்டடத்துக்குக் கால்கோள் நாட்டினார். அவரே கொத்தனாரிடமிருந்து கரணையை வாங்கி, செங்கல்லை வைத்து, சிமிண்ட்டும் பூசினார். புதிய பாரதத்தின் சிற்பியாக விளங்கும் நேரு கட்டடம் கட்டும் கலையையும் தெரிந்து கொண்டிருக்கிறார்!

அமெரிக்கச் செயற்கைச் சந்திரன்

அமெரிக்காவின் செயற்கைச் சந்திரனை வான வெளிக்கு அனுப்பும் பரிசோதனை வீணாகி விட்டதாகத் தெரியவருகிறது. கடைசி நிமிஷத்தில் தான் சந்திரனைச் சுமந்து செல்ல வேண்டிய ராக்கெட்டில் சிறு மாறுதல் செய்ய வேண்டியிருப்பது தெரியவந்ததாம். அமெரிக்கச் சந்திரனின் குறுக்களவு ஆறரை அங்குலம்தானாம். எடை 184 ராத்தல், இதைச் சக்தி வாய்ந்த தூரதிருஷ்டிக் கண்ணாடியினால்கூடப் பார்ப்பது கஷ்டமாய் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதைச் சுமந்து சென்ற ராக்கெட் மேலே கிளம்பும்போதே பிசுபிசுத்து வெடித்துப் போய்விட்டது.

பால பவனம்

சென்னை சர்க்கார் மாளிகையில் அமைந்துள்ள பழைய சட்ட சபைக் கட்டடத்தைச் சிறுவர் சிறுமியருக்கான படக்காட்சிச் சாலையாக மாற்றியிருக்கிறார்கள். இந்த வைபவத்தை இந்தியப் பிரதமர் நேரு சமீபத்தில் தொடங்கி வைத்தார். இந்தக் காட்சிச் சாலையில் குழந்தைகளுக்கான படங்களே இனித் திரையிடப்படுமாம். இதைப் பால பவனம் என்று அழைக்கலாம் என்று நேரு குறிப்பிட்டார்.

கண்ணன் பொங்கல் இதழில்

பரிசுத் தொடர்கதை

முழு நாவல்

அதிகப் பக்கங்கள் விலை 13 ந. பைசா

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 **இதழ்: 24**

15 - 12 - '57

குழந்தைகளே!	பக்கம்	2
மாற நாயனார்	..	3
ராக்கெட் விமானம்	..	5
ஜோசியம் எப்படி?	..	9
ஊர் சுற்றிகள் சங்கம்	..	12
கவியரங்கம்	..	16
யார் குற்றவாளி?	..	17
எதிர்பாராத முடிவு	..	21
கடற் புலி	..	25
நீங்களும் நானும்	..	27
வாண்டுகள்	..	30

அட்டைப் படம்!
போட்டோ: N. ராமகிருஷ்ணா

செய்திகள் - 2-ஆம் அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

ஆயிரத்தில் ஒருவன்!

சில்க் ஜிப்பாவும் கழுத்தில் தங்கச் செயினும் கையில் வைர மோதிரங்களும் ஒளியை அள்ளி வீசின. இந்தக் கோலத்தில் டிக்கட் வாங்குவதற்காகத் திருச்சி ஜங்ஷனில் நின்றுகொண்டிருந்த ஒரு கனவான் திடீரெனப் பரபரப்படைந்தார். டிக்கட் வாங்குவதற்காகப் பர்ஸை எடுக்கப் பையில் கையை விட்ட அவர் தேள் கொட்டியதுபோல துடிதுடித்தார்.

"வெளியில் சொன்னால் வெட்கம்" என்ற கொள்கையையுடைய அவர் அந்த ஜங்ஷன் முழுவதும் தேடலானார்.

இதையே கவனித்துக்கொண்டிருந்த ஒரு பையன், "ஸார்!" என்றான். "என்ன தம்பி?" என்றார் கனவான்.

"எதைத் தேடுகிறீர்கள்?"

"பர்ஸைக் காணோம்."

"நிறம் என்ன?"

"சிவப்பு. ரூப்சந்த் சேட் என்ற பெயரோடு முகவரியும் குறித்திருக்கும்."

"இதுதானே?" என்று அந்தப் பையன் அதே மணி பர்ஸைக் கொடுத்ததோடு, "அந்தப் பெஞ்சியினடியில் கிடந்தது ஸார். ஸ்டேஷன் மாஸ்டரிடம் கொடுக்கலாம் என்றிருந்தபோது உங்களைக் கண்டேன்" என்று கூறினான். "நல்ல பையன்! ஆயிரத்தில் ஒருவன்! தம்பி, உன் நல்ல குணத்திற்கு எதைக் கொடுத்தாலும் ஈடாகாது. இருந்தாலும் என் அன்பளிப்பாக இதைப் பெற்றுக்கொள்!" என்று கூறிய கனவான் பர்ஸைத் திறந்தார்.

பர்ஸைத் திறந்த கனவானுக்கு இப்போது பாம்பே கடித்தது போல இருந்தது. அதிலே அவர் வைத்திருந்த ஏழு நூறு ரூபாய் நோட்டுக்கள், பத்து ஐந்து ரூபாய் நோட்டுக்கள், பத்து நயா பைசா நாணயங்கள் எதையுமே காணோம்!

திடுக்கிட்ட கனவான் பர்ஸிலிருந்து, கண்களை விடுவித்துக்கொண்டு தம்முன் நின்ற பையனைப் பார்த்தார். அங்கே அதற்குள் அவனையும் காணோம்!

குழந்தைகளே!

இந்தப் பக்கத்தை உங்கள் பெற்றோர்களிடமும் காட்டுங்கள். இந்த இதழோடு கண்ணனுக்கு எட்டு ஆண்டுகள் முடிவடைகின்றன. பிறப்பது ஒன்பதாம் ஆண்டு. இந்த எட்டு ஆண்டுகள் கண்ணன் புரிந்துள்ள சாதனைகள் எத்தனை எத்தனையோ!

குழந்தைகள் பத்திரிகை உலகிலே கண்ணன் தனக்கென்று நிகரற்ற இடம் ஒன்றைப் பெற்றுச் சிறப்புடன் திகழ்கிறான். குழந்தைகளுக்கான இலக்கியங்கள் தனியாக இல்லை, போதிய நல்ல பத்திரிகைகள் இல்லை என்ற குறையை உணர்ந்து, கண்ணன் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றினான். தமிழ் நாட்டின் குழந்தைக் குலத்துக்கு உற்ற துணைவனாக அவன் இல்லந்தோறும் தவழ்ந்து விளையாடப் புறப்பட்டான்.

சமீபத்திலே சென்னை வந்திருந்த நேருஜி 'குழந்தைகளுக்குத்தான் முதலிடம்' என்று நகரசபைகள், பொதுவிடங்கள் எங்கும் எழுதி வைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். மற்ற நாடுகளில், குறிப்பாக ரஷ்யாவில் குழந்தைகளை மிகவும் அருமையாகப் பராமரிக்கிறார்கள் என்றும் கூறினார். அதேபோல நம் நாட்டுக் குழந்தைகளையும் நாம் நல்ல முறையில் உருவாக்க வேண்டும் என்பதே அவருடைய ஆசை.

குழந்தைகள் இலக்கியங்கள் குறைவு, பத்திரிகைகள் குறைவு என்பவற்றிற்கெல்லாம் முக்கிய காரணம் ஒன்று உண்டு. அவற்றிற்கு ஆதரவும் குறைவாக இருப்பதுதான் காரணம். என்னதான் குழந்தைகளாகப் பார்த்துத் தேடி ஆதரவு கொடுத்தாலும் அது பத்திரிகைகளையோ, புத்தகங்களையோ வளர்ப்பதற்குப் போதாது. பொதுப் பணத்தில் நிர்வகிக்கப்பட்டு வரும் நூல் நிலையங்கள், கல்விச் சாலைகள், வாசக சாலைகள் இங்கெல்லாம் குழந்தைகளுக்கு என்று தனிப் பிரிவு ஏற்படுத்தி, அவர்களுக்காக உழைத்து வரும் பத்திரிகை, புத்தக நிலையங்களுக்கு ஆதரவு காட்ட முன்வர வேண்டும். சர்க்காரும் ஆதரவு காட்டும்படித் தூண்ட வேண்டும். நம் நாட்டுக் குழந்தைகள் எல்லாரும் பணம் கொடுத்துப் பத்திரிகையோ புத்தகமோ வாங்கிப் படிக்கும் நிலை இன்னும் வரவில்லை. பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகள் எதைப் படிக்கிறார்கள் என்று தெரிந்துகொள்கிற நிலைகூட இன்னும் ஏற்படவில்லை. அப்படி இருக்கும்போது இலக்கியங்கள் எப்படி வளரும்?

நல்ல காலத்துக்கு அறிகுறியாக இப்பொழுதுதான் நாட்டின் கவனமெல்லாம் குழந்தைகள் பக்கம் திரும்பியிருக்கிறது. அவர்களுடைய கல்வியில், அவர்களுடைய வளர்ச்சியில் அக்கறை காட்டவேண்டும் என்ற உணர்ச்சி மேலோங்கி வருகிறது. இந்த உணர்ச்சி ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் வருகிற எழுச்சியாக இராமல் எப்போதும் ஆக்கம் தருகிற முயற்சியாக உருப்பெற வேண்டும். அந்த நல்ல நாள் வெகு சீக்கிரமே வரும் என்று நம்புகிறோம்.

இந்த நாட்டுக் குழந்தைகளின் மன-உடல் வளர்ச்சிக்கு எந்த வகையில் பணியாற்ற வேண்டுமோ, அந்த வகையில் கண்ணன் கடந்த எட்டு ஆண்டுகளாகச் சிறப்பான தொண்டாற்றி வருகிறான். குழந்தைகளின் உள்ளத்துக்கு உவப்பைத் தரும் அழகான சுவாரஸ்யமான கதைகள், அருமையான பாடல்கள், பொழுது போக்கு விளையாட்டுகள், வேடிக்கைக் கணக்குகள், விஞ்ஞானப் புதுமைகள், பெரியோர் வரலாறுகள், எல்லாம் தாங்கி வெளிவருகிறான். ஒன்பதாம் ஆண்டில் மேலும் சிறப்பாகப் பணியாற்ற நாட்டின் குழந்தைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொது நலவாதிகள், சர்க்கார் அனைவரும் ஆதரவு வழங்குவார்கள் என்று நம்புகிறோம்.

—ஆசிரியர்.

மாறநாயனார்



கிங்கரன்

நம் தமிழ் நாட்டில் சைவம், வைணவம் என்று இரு பெரு சமயங்கள் உண்டு. சைவ சமயம் நாயன்மார்களுடைய கருத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டது. வைணவ சமயம் ஆழ்வார்களின் கருத்தை முக்கியமாகக் கொண்டது. நாயன்மார்கள் சிவ பக்தியையும் ஆழ்வார்கள் விஷ்ணு பக்தியையும் முக்கியமாகக் கொண்டவர்கள். நாயன்மார்கள் அறுபத்துமூவர் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் சிவனுக்கும் சிவ பக்தர்களுக்கும் தொண்டு புரிவதையே லட்சியமாகக் கொண்டவர்கள். அதே போல ஆழ்வார்கள் விஷ்ணுவுக்குத் தொண்டு செய்து வந்தார்கள். நாயன்மார்களைப் பற்றிச் சொல்லும் நூல் சேக்கிழாரால் எழுதப்பட்டு, பெரிய புராணம் என்றும் வழங்கப்படுகிறது. சிவனடியார்க்குத் தொண்டு செய்து நற்கதி அடைந்த நாயனார் ஒருவர் கதையே இது.

இளையாங்குடி என்னும் ஓர் ஊரில் வேளாளர் மரபில் மாறனார் என்னும் பெயர் கொண்ட ஒரு பெரியார் இருந்தார். அவர் சிதம்பரத்தில் எப்பொழுதும் ஆனந்தக் கூத்தாடும் நடராஜப் பெருமானுக்குத் தொண்டு செய்வதிலேயே எப்பொழுதும் ஈடுபட்டு வந்தார்.

அவர் சிவனடியார்களைக் கண்டால் அவர்களை உவப்புடன் வரவேற்று நல்ல ருசியுள்ள உணவு படைத்து உபசரிப்பார். இவ்விதம் தினந்தோறும் அவர் பல அடியார்களுக்குத் தொண்டு செய்து வந்தார்.

அவர் மிகவும் வறுமையால் வருந்தும்படி நேர்ந்தது. ஆயினும் அடியார்கள் யாரேனும் வந்தால் அவர்களுக்குத் தாம் உண்ணும் உணவைப் படைத்து உபசரிப்பது அவர் வழக்கம்.

அடியார்களின் உண்மைத் தொண்டு வீண் போவதில்லை. இறைவனே இவர்மீது கருணை கொண்டார். ஒரு நாள் நடு நிசி சமயம் இருக்கும். இறைவன் சிவனடியார் போல் வேஷம் பூண்டு மாற நாயனார் வீட்டை அடைந்தார். அப்போது நல்ல மழை. வாசலை அடைந்த சிவனடியார்



நின்றிருக்கும் பையன்: அட்டையை ஒட்டி என்னடா செய்துண்டு இருக்கே?

உட்கார்ந்திருக்கும் பையன்: நான்கூட ரஷ்யா விட்டமாதிரி செயற்கைச் சந்திரன் பண்ணி பறக்கவிடப்போறேன்! அதான் இது.

கதவைத் தட்டினார். கதவைத் திறந்து பார்த்தார் மாற நாயனார். வெளியே மழையில் நனைந்து கொண்டு நிற்கும் அடியாரைப் பார்த்து உடனே உள்ளே அழைத்துச் சென்றார். அவருக்கு உலர்ந்த ஆடைகள் அளித்து ஓர் ஆசனத்தில் அமரச் செய்தார். அந்த நேரத்துக்குமேல் உணவு தயாரிக்க வேண்டுமே! அவர் மனைவி கையைப் பிசைந்து நின்றாள். சமைக்க ஒன்றுமே இல்லை. விறகுகூட இல்லை. கடன் வாங்குவதற்கும் நடு நிசி. எங்கே செல்வது? உடனே அந்த அம்மையார், ''இன்று பகலில் வயலில் செந்நெல் விதைத்தோமே. அவை இப்போது முளை கண்டிருக்கும். அவற்றைக் கூடையில் எடுத்து வந்தால் சமைக்கலாம்'' என்றார். மாற நாயனாரும் அவ்வாறே சென்று கூடையில் செந்நெல் முளையைக் கொண்டு வந்தார். ஆனால் அடுப்பு எரிக்க விறகு வேண்டுமே! வீட்டுக் கூரையிலிருந்த மூங்கில்களைப் பிடுங்கிக் கொடுத்தார் நாயனார். பிறகு முளையை வறுத்து, காய்ந்த பின் அரிசியாகக் குத்தி உணவாக்கினார். வீட்டுத் தோட்டத்திலிருந்த கீரைகளைப் பிடுங்கிவந்து பொறியல் செய்தார்.

சிவனடியார் இவ்வளவுக்கும் தூங்குவதுபோல் பாசாங்கு செய்தார். நாயனார் அவரை அணுகி, ''ஐயனே, உணவு தயார் ஆகிவிட்டது. உண்டு, பசியாற வேண்டும்'' என வேண்டினார். உடனே சிவனடியார் வேஷம் பூண்ட பரமேசுவரன் ஜோதி சொரூபமாகத் தோன்றினார். இதைக் கண்டு அதிசயித்த நாயனாரும் அவரது மனைவியாரும் திகைத்து நின்றனர். உடனே பரமேசுவரன் காளை மீது உமாதேவியுடன் தோன்றி, நாயனாரைப் பார்த்து, ''நீயும் உன் மனைவியும் அடியார்களை வணங்கி உபசரித்து உணவு அளித்துத் தொண்டு செய்வதைக் கண்டு மகிழ்ந்தேன். இனி நீங்கள் வறுமையால் வருந்த வேண்டியதில்லை. சகல சுகங்களையும் பெற்று, கைலாயத்தை அடைந்து நித்தியானந்தத்துடன் இன்புற்று வாழ்வீர்களாக!'' என்று கூறி மறைந்தார். சிவனடியார் மெய்ம்மறந்து நின்றார்.

பசி என்போர்க்கு நம்மால் இயன்றளவு உதவி புரிந்து அவர்களின் பசிப் பிணியைப் போக்க முயல்வதே அடியார் தொண்டு ஆகும். அதனால் தான் ஔவையார் கூட, 'ஐயமிட்டு உண்' என்று பாடினார்.



ராக்கெட் பிரயாணம்

ர. சீ. வரதன்

திடீரென்று ஒரு நாள் ரேடியோவில் வந்தது ஓர் அறிவிப்பு:

"இன்னும் இரண்டு வாரத்துக்குள் இந்தப் பூவுலகத்தை விட்டு வேறு உலகத்துக்குச் சாதாரண மக்கள் செல்லும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ராஜாங்க ஊழியர் செல்லக் கூடாது. மற்றவர்களில் இஷ்டமானவர் பின் தங்கலாம். இரண்டு வாரத்தில் பெரிய அணுக்குண்டு யுத்தம் ஒன்று இந்த உலகத்தில் நடைபெறப்போகிறது. அதன் பொருட்டுச் சாதாரண மக்களை எச்சரிக்கிறோம்."

இந்தச் செய்தி அறிக்கை வந்த மறுநாள் பத்திரிகைகளும் இதைப் பிரமாதமாகக் கொட்டை எழுத்தில் பிரசுரித்தன. இந்த எச்சரிக்கை நோட்டீஸின் ஆயிரக்கணக்கான பிரதிகள் நாடு, நகரம், கிராமம் எல்லா இடங்களிலும் பறக்க ஆரம்பித்தன. இவற்றையெல்லாம் படித்த பின்தான் அபாயத்தின் எல்லை தென்பட்டது. 'உலகம் அழிவுப் பாதையில் அடி வைத்துவிட்டதா?' என்ற கேள்வி அடிக்கடி தோன்றியது. 'நடந்தது நடக்கட்டும்; கடவுளே கதி' என்றும் இருக்க முடியவில்லை. வேறு உலகத்துக்குச் சென்று நாம் நம் குடும்பத்தாருடன் குடியேறி

விடலாம். இந்தச் சனியன் பிடித்த பூலோகமே வேண்டாமென்று எண்ணினேன். வேறு கிரகத்துக்கு மக்கள் இன்னும் செல்லவில்லை. கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது என்றாலும் துணிந்து விட்டேன்.

நன்றாக உடைகள் அணிந்து கொண்டு 'யூனிவர்ஸல் பிளானெட்ஸ் ராக்கெட் ஸர்வீஸ்' என்ற புதிய போக்குவரத்து ஸ்தாபனத்தை நோக்கி விரைந்து சென்றேன். மனத்துக்குள், 'சாதாரண மக்களில் நான்தான் முதலாவது மனுதாராக இருப்பேன்' என்ற எண்ணம். அட, கேசவா! எனக்கு முன்னால் ஆயிரக்கணக்கான பேர் அங்கே 'க்யூ'வில் நின்றுகொண்டிருந்தார்கள்!

ஸ்தாபனத்துக்கு வெளியே ஒரு பெரிய போர்டில் 'ரூ. 500 கட்டி விசாரணை ஆபீஸரிடமிருந்து மனுத்தாள் வாங்கிப் பூர்த்தி செய்து, எவ்வளவு ஸீட்டுகள் தேவையோ அவ்வளவு ஸீட்டுகள் ரிசர்வ் செய்து கொள்ளவேண்டும்' என்றிருந்தது. எப்படியோ கைச்சாமான்களை விற்று ரூ. 500 சம்பாதித்து முண்டியடித்துக் கட்டி, மனுத்தாளை வாங்கிப் பூர்த்தியும் செய்துவிட்டேன்.

அதில் 'உங்கள் பெயர் என்ன? தொழில் என்ன? கல்யாணம் ஆகிவிட்டதா? எத்தனை குழந்தைகள்? உங்கள் குடும்பத்தில் எத்தனை பேர் பிரயாணம் செய்யும்படி உத்தேசம். அத்தனை பேரிலும் ராஜாங்க ஊழியர் எவரும் இல்லையா? நீங்கள் எந்தக் கிரகத்துக்குச் செல்வதாக உத்தேசம்? எப்போதாவது ஆகாயப் பிரயாணம் செய்திருக்கிறீர்களா?' என்ற சரமாரியான கேள்விகளுக்கெல்லாம் ஒருவிதமாக எழுத வேண்டிய பதிலை எழுதி விட்டேன். 15 பேருக்கு ஸீட் ஒதுக்கும்படி எழுதினேன். எந்தக் கிரகத்துக்குப் பிரயாணம் செய்ய விரும்புகிறீர்கள் என்ற கேள்விக்கு எதிரே, 'கூட்டம் அதிகமில்லாத இடம் செவ்வாயாகத்தான் இருக்கக் கூடும்; அதுதானே பச்சைப் பசேலென்று தெரிவதாகக் கூறினார்கள்' என்று எண்ணி, 'செவ்வாய்' என்று எழுதி விட்டேன். கடைசியாக ஒரு கேள்வி இருந்தது. 'நீர் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்?' என்பதுதான் அது. 'பரீட்சைத் தாளில் காலி இடத்தைப் பூர்த்தி செய்க' என்பார்கள். அதை மார்க்குப் போடுகிறவரே பூர்த்தி செய்து கொள்ளட்டும் என்று சில மாணவர்கள் விட்டு விடுவது வழக்கம். அதேபோல இந்த இடத்தை நானும் காலியாகவே விட்டு வைத்தேன். பூர்த்தியான மனுவைக் கொடுத்துவிட்டேன்.

மறுநாள் ஒரு சந்தேகம் வந்து விட்டது. 'ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசம் செல்வதானால் பர்மிட் வாங்கவேண்டுமே. ஓர் உலகத்திலிருந்து மற்ற உலகம் செல்லவும் ஏதாவது பர்மிட் வேண்டுமோ?' என்று எண்ணினேன். பர்மிட் ஆபீஸை நோக்கிச் சென்றேன். ராக்கெட் பிரயாணத்துக்குப் பர்மிட் அவசியமில்லை

என்று கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

இரண்டு நாள் ஆனபின் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் "பதினைந்து பேர் கொண்ட உங்கள் குடும்பத்துக்கு வெள்ளிக்கிழமை புறப்படும் ராக்கெட் நெ. 96-இல் ரிஸர்வ் செய்திருக்கிறோம். ராக்கெட்டில் கால் டன் எடையுள்ள சாமான்கள் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்லலாம். சாமான்களுடன் அன்று காலை 9 மணிக்குள் வந்து சேருங்கள். உங்கள் ராக்கெட்தான் முதன் முதலாகச் செவ்வாய்க் கிரகம் செல்லும் ராக்கெட். ராக்கெட் முதலில் சந்திரலோகம் சென்று சிறிது தங்கியபின் செவ்வாய்க் கிரகம் நோக்கிச் செல்லும் என்பதையும் இதன் மூலம் அறிவிக்கிறோம்' என்றிருந்தது.

நான் புறப்படும் விஷயம் காட்டுத் தீபோல் எங்கும் பரவிவிட்டது. உறவினர், நண்பர், தெரிந்தவர், தெரியாதவர் இப்படிப் பல பேர் என்னைப் பார்க்க வந்து விட்டார்கள். 'போய்ச் சேர்ந்ததும் ராக்கெட் சர்வீஸ் இடம் எப்படியிருக்கிறது என்று கடிதம் போடுங்கள்' என்று பலபேர் கேட்டுக் கொண்டார்கள். ஒருவிதமாக எல்லாருக்கும் விடை கொடுத்து அனுப்பிய பின் பிரயாணச் சாமான்களைத் தயாரிக்க ஆரம்பித்தேன்.

போனவுடன் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படாமல் இருக்கவேண்டுமே என்ற கவலை என் அம்மாவுக்கு. அவள் ஒரு கூடை நிறைய புளியஞ் சாதமும் ஒரு கூடை தயிர் சாதமும் பிசைந்து வைத்து விட்டாள். என் மனைவிக்கோ எவர்சில்வர் பாத்திரங்களை விட்டுப் போகப் பயம்; அங்கே கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகமும். அதனால் மொத்த சாமான்களில் முக்கால் பங்கு எவர்சில்வர் பாத்திரங்கள் பிரயாணத்துக்கு முஸ்தீப்பாக நின்றன. தங்கை சரஸா, "அண்ணா, அங்கே இந்தப் பேட்டுப் புடைவைகளும் ஜம்பர்களும் கிடைக்குமோ கிடைக்காதோ; அதனால் இவைகளை எடுத்துக் கொள்கிறேன்" என்று கூறி ஒரு டஜன்



"தாத்தா! ஒரு குழந்தைக்கு யானைப் பால் கொடுத்துண்டு வந்ததில் ஒரே வாரத்திலே 100 பவுண்டு எடை அதிகமாயிடுத்தாம்!"

"போடா மண்டு, எந்தக் குழந்தைடா அது?"

"யானையோட குழந்தை, தாத்தா!"

புடைவை ரவிக்கைகளை எடுத்துக் கொண்டாள். இவற்றையெல்லாம் பார்த்த என் கடைக்குட்டி சுகுணா, "அப்பா, அப்பா...! என் பொம்மையையெல்லாம் நானும் எடுத்துக்கிறேம்பா" என்று கொஞ்சினாள். இத்தனையோடு எதற்கும் கைக்குக் காவலாகக் கொஞ்சம் அரிசி பருப்புகளையும் எடுத்துக் கொண்டபின் கடைசியாக எல்லாவற்றையும் எடைபோட்டு, சிலவற்றைக் குறைத்து, கால் டன் எடைக்குச் சாமான்களை எடுத்துக் கொண்டு, அதனால் குடும்பத்தில் சிலரின் முணுமுணுப்புகளுடன் 'கூண்டோடு கைலாசம்' போக 'ராக்கெட் ஸர்வீஸ் ஸ்தாபன'த்தை அடைந்தோம். ராக்கெட்டில் கிளம்புவதற்கு முன்னால், 'ராக்கெட்டுக்குப் போகும் வழியில் ஆபத்து நேர்ந்து, அதன் மூலம்



''திருட்டுப் பயலே? என் பென்ஸிலைத் திருடிண்டு, வீட்டுக்குள்ளேயா ஒளிஞ்சிண்டிருக்கே? வெளியே வா, பார்த்துக்கிறேன்.''

எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பிராணாபத்து நேரிட்டால், அதற்கு ஸ்தாபனத்தார் ஜவாப்தாரியல்ல. எனக்கோ என் பந்து மித்திரர் எவருக்காவதோ எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க ஸ்தாபனத்தார் சட்டப்படி கட்டுப்பட்டவரல்ல. என் சொந்த இஷ்டத்தின் பேரிலேயே துணிந்து பிரயாணம் செய்கிறேன்'' என்று என்னிடம் முறைப்படி வாக்குமூலம் வாங்கிக் கொண்டார்கள்.

ராக்கெட் கிளம்பியது. சில மணி நேரத்துக்குள் சந்திரலோகத்தை எட்டியது. அங்கே எடை குறைந்து பறக்கவே ஆரம்பித்துவிட்டோம். கால்கள் பூமியில் பாவவில்லை. இதைக் கண்ட கடைக் குட்டி சுகுணா, ''அப்பா, அப்பா, நான் பறக்கறேனே! இறக்கையில்லையே! எப்படியப்பா பறக்க முடிகிறது?'' என்றாள்.

''இந்த உலகத்துக்கு வந்தால் எல்லாரும் இப்படித்தான் பறப்பார்கள்'' என்றேன். வேறு என்ன பதில் கூற முடியும்?

பிறகு கொஞ்ச நேரம் கழிந்த பின், ராக்கெட் தன் பிரயாணத்தைத் தொடர்ந்தது. இரண்டொரு நாளில் செவ்வாயை அடைந்தோம். ஆனால் சந்திர லோகத்தில் பறந்த மாதிரியோ, பூமியில் நடந்த மாதிரியோ எங்களால் சுலபமாக இயங்க முடியவில்லை. உடம்பு இரும்புபோல் கனத்தது.

''அப்பா, எனக்கு நடக்கவே முடியவில்லையே'' என்றான் மகன் ரங்கன்.

''அப்பா, உடம்பு கனமாயிருக்கு அப்பா, ஏன் அப்பா?'' என்றாள் சுகுணா.

''இந்த உலகத்தில் அப்படித்தான்!'' என்றேன் நான்.

சுற்றிலும் காடுகளும் மலைகளும் இருந்தன. எங்களைத் தவிர ஒரு உயிர்ப் பிராணியும் இல்லைபோலத் தெரிந்தது. ''நீங்கள்தான் செவ்வாய் உலகத்துக்கு முதல் முதல் போகிறீர்கள்'' என்று ராக்கெட் சர்வீஸ்காரர்கள் சொல்லியிருந்தார்கள். அது இப்போது எனக்கு ஞாபகம் வந்தது. 'இனிக் கடவுள் தான் இந்த உலகத்தையும், என்னையும், என் குடும்பத்தினரையும் காப்பாற்றவேண்டும்' என்று எண்ணிக் கொண்டபோது ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது. பிரம்மாண்டமான பிராணி ஒன்று எங்கிருந்தோ கிளம்பி எதிரே தோன்றியது. அது விடும் மூச்சோ ஒரே நெருப்பாயிருந்தது. அது மெல்ல மெல்ல நடந்து நான் இருக்குமிடம் நோக்கி வந்தது. குடும்பத்தார் என்ன ஆனார்களோ தெரியாது. என்னால் ஓடமுடியவில்லை. அந்தப் பயங்கரப் பிராணி என்னை வாயிலே கவ்வியது. ''ஐயோ!''...என்று கத்தினேன்.

அப்புறம்...அப்புறம்.... அப்புறம் என்ன? விழித்துவிட்டேன். என்ன பயங்கரமான கனவு! இன்னும் சந்திரலோகமே அடையவில்லை; செவ்வாயை எப்போது அடையப் போகிறார்களோ! எல்லாம் பத்திரிகையில் ருஷியர்கள் இன்னும் சில வருஷங்களில் செவ்வாயை அடைந்து விடுவார்கள் என்று வரும் செய்தியின் எதிரொலி தான் இது. கனவே இப்படி இருக்குமானால், நிஜமாகப் போகிறவர்களின் பாடு எப்படி இருக்குமோ!

ஜோசியம் எப்படி?

பி. கே. சாமி

ரெயில் பிரயாணத்தின்போது சில சமயம் நிகழும் சம்பவங்கள் கற்பனையைவிடச் சுவையானவை.

அத்தகைய ஒரு நிகழ்ச்சியைக் கீழே படிக்கலாம்.

* * *

விருதுநகர் ஜங்ஷனில் அன்று ஏகப்பட்ட கூட்டம். தூத்துக்குடி செல்லும் எக்ஸ்பிரஸ் வண்டி புறப்படத் தயாராக நின்றுகொண்டிருந்தது. பிளாட்பாரத்தின் ஒரு கோடியில் கார்டு விசில் ஊதும் குரல் தெளிவாகக் கேட்டது.

நான் ஏறியிருந்த பெட்டி மிகப் பழமையானது என்ற காரணத்தாலோ என்னவோ, ஆட்கள் அதிகம் ஏறவில்லை.

என்னுடைய பெஞ்சியில் நான் மட்டும்தான். எதிர்த்த பெஞ்சியில் ஒரு கிராமத்துப் பெரியவர்.

* * *

ரெயில் மெல்ல நகர்ந்தது. அந்தச் சமயம் பார்த்து எங்கிருந்தோ ஓடிவந்து எங்கள் பெட்டியில் தொற்றிக்கொண்டான் ஒரு வாலிபன்.

என் பக்கத்திலே பையை வைத்து விட்டு அமர்ந்தான். 'குப்' பென்று அடித்த சென்ட் வாசனை ஆளைக் கிறங்கச் செய்தது. நான் ஜன்னல் பக்கம் சாய்ந்தவாறு அவனை ஓரக் கண்ணால் கவனித்தேன்.

வாட்ட சாட்டமான அந்தப் பேர்வழி, மெல்லிய ஜிப்பா அணிந்திருந்தான். வெற்றிலைக் காவி படிந்த பற்கள் வெளியே தெரியும் படி அமைந்த உதடுகள். பறட்டைத் தலை. சினிமாக்காரன் மாதிரி ஏதோ ஒரு தினுசான மீசை. அது அவனுக்குக் கொஞ்சமும் பொருத்தமில்லை. அதைப் பற்றி அவனுக்குக் கவலையுமில்லை.

எந்தக் கவலையுமே இல்லாதவன் போல், அலட்சியமாகக் கைக்குட்டையை எடுத்து உதறினான். முகத்தைத் துடைத்து விட்டு, பையிலிருந்த சீப்பால் கட்டுக் கடங்காத கிருப்பை வாரிக் கொண்டான்.

பத்து நிமிஷ அமைதிக்குப் பின் எதிரே அமர்ந்திருந்த பெரியவருடன் மெல்லப் பேச்சுக் கொடுக்கத் தொடங்கினான்.

சூலக்கரை ஸ்டேஷனை நோக்கி லட்சியம் பண்ணுமல் எக்ஸ்பிரஸ் விரைந்தது.

''பெரியவர் பையிலே என்ன? மஞ்சள் தடவிய காகிதம் போல் தெரிகிறதே! ஜோசியம் பார்ப்பீர்களா?'' என்று கேட்டான் வாலிபன்.

''எனக்குத் தெரியாது. என் மகனுக்குத்தான் தெரியும். ரொம்ப கெட்டிக்காரன்!'' என்று பெருமைப் பட்டுக்கொண்டார் நாட்டுப்புற மனிதர்.

''இதில் என்ன கெட்டிக்காரத்தனம் இருக்கிறது ஐயா? நான் கூடத்தான் அருமையாக ஜோசியம் சொல்லுவேன்! யார் பணம் கொடுக்கிருர்கள்?'' என்று அலட்சியமாகச் சொன்னுன் பறட்டைத் தலை.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது! கிழவருக்கும் கூடத்தான்! இவனுக்காவது, ஜோசியமாவது, தெரிவதாவது! என்ன பேத்தல் இது!

நான் ஏதோ கேட்க வாயெடுக்கு முன் பெரியவர் முந்திக்கொண்டார்.

''நிஜமாகவே உனக்கு ஜோசியம் சொல்லத் தெரியுமா? நான் நம்பமாட்டேன்!'' என்ருர் அழுத்தமாக.

''மூன்று ரூபாய் தட்சிணை உண்டு. மூன்று பலன்கள் சொல்லலாம். ஒரே மணி நேரத்தில் பலிக்கும்!'' என்று நிமிர்ந்து உட்கார்ந்தான் வாலிபன்.

கிழவர் உடனே, ''மறு பேச்சு வேண்டாம். உன்னிடம் மூன்று ரூபாய் இருந்தால் ஐயாவிடம் கொடு: நானும் மூன்று ரூபாய் கொடுக்கிறேன். உன் ஜோசியம் பலித்தால் நான் மூன்று ரூபாய் இழக்கிறேன். பலிக்காவிட்டால் நீ இழக்க வேண்டும். என்ன சொல்கிருய்?'' என்று கேட்டார்.

இந்த வயதில் இவ்வளவு தெம்பு எப்படி வந்தது என்று ஆச்சரியம் எனக்கு!

''சம்மதிக்கிறேன்'' என்று கூறிய வாலிபன், ''என்னிடம் பணமாக இல்லை; ஆனுலும் இந்தப் பேனுவை ஈடாகக் கொடுக்கிறேன். ஐந்து ரூபாய் கிரயமுள்ளது'' என்று கொடுத்தான்.

பெரியவரும் மடியை அவிழ்த்துத் தம்மிடம் இருந்த ஆறு ரூபாயில் மூன்று ரூபாய் மட்டும் தனியாக எடுத்துத் தந்தார்.

வாலிபன் ஜோசியம் சொல்லத் தயாராளுன்.

''பெரியவரே! நூற்றுக்குக் கீழே ஒரு எண் சொல்லுங்கள், பார்க்கலாம்!''

''எண்பத்தெட்டு'' என்ருர் கிழவர்.

''சரி, முதலாவது நீங்கள் போகிற ஊர் சொல்லட்டுமா?''

''உம்.''

''வந்து....எட்டும் எட்டும் பதினறு...ஒன்றும் ஆறும் ஏழு... 'ஏழென்ப தைங்கரனே எதைக் குறிக்குமென்று சொல்ல ஏழைக் கிரங்கி யருள் எம்பெருமான்''.. என்று முணு முணுத்துக் கண்ணை மூடி ஒரு நிமிஷம் இருந்து, ''அப்படியானல் நீங்கள் போகிற ஊர் கோவில்பட்டி தானே?'' என்று கேட்டான்.

''அட பாவி, சொல்லி விட்டானே! ஆமா...கோவில்பட்டி தான்!...அப்புறம்?''

''இரண்டாவது; நீங்கள் மட்டும் தனியாகப் போகவில்லை; கூட ஒரு பையனும் வருகிருன். சரிதானு?''

''ஓ! அதுவும் சரிதான்!'' என்று கிழவர் சொல்லி வாய் மூடவும், அவர் பேரன் பக்கத்து அறைக் கதவைத் திறந்துகொண்டு வரவும் சரியாக இருந்தது.

நானே அவனை அப்போதுதான் பார்க்கிறேன்; இனி ஒன்றே ஒன்றுதான் பாக்கி!

''மூன்ருவதாக; இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களுக்கு ஒரு சங்கடம் வந்து நேரும். அது மூன்று ரூபாய்ச் செலவில் தீர்ந்து

போகும்; பாருங்கள்!'' என்று கூறி முடித்தான், வாலிபச் சவுடால் ஜோசியன்.

எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது!

நேரம் நகர்ந்தது. சாத்தூர் வந்தது. டிக்கெட் பரிசோதகர் ஒருவர் திடீரென்று நுழைந்தார்.

என் டிக்கெட்டைக் காட்டி, பின்புறம் கிறுக்கி வாங்கிக்கொண்டேன்.

கிழவர் வெற்றிலைப் பையைத் திறந்து பார்த்துவிட்டு, தேள் கொட்டியவரைப் போல் திடுக்கிட்டார்! அவர் டிக்கெட்டைக் காணோம்!

பேரனிடமும் கேட்டார்; இல்லை.

வாலிபனின் மூன்றாவது ஜோசியமும் பலித்துவிட்டதே! என்ன விந்தை!

டிக்கெட் பரிசோதகர் கிழவர் பேச்சை நம்பவில்லை. விருதுநகரிலிருந்து கோவில்பட்டிக்கு ஏற்பட்ட கட்டணம் இருவருக்கும் விதித்து, ரசீது எழுதப் பென்சிலை எடுத்தார்.

''சார், கொஞ்சம் பொறுங்கள். அதோ ஒரு போலீஸ்காரர் வருகிறார் போலத் தெரிகிறது. அவர் வரட்டும் சொல்கிறேன்'' என்று தடுத்தேன் நான்.

''எதற்காக ஐயா, போலீஸ்?'' என்று கடுகடுத்தார் பரிசோதகர்.

''இந்த ஆளைச் சோதனை போடுங்கள். பெரியவர் டிக்கெட்டும் பையனுடைய டிக்கெட்டும் கிடைக்கிறதா இல்லையா, பார்க்கலாம்!'' என்றேன்.

வாலிபன் விழித்த விழி அவ்வளவு நன்றாக இல்லை. போலீஸ்காரர் வந்து கையைப் பற்றியதுமே பாக்கெட்டிலிருந்து முழு டிக்கெட் ஒன்றையும், இடுப்பில் செருகியிருந்த அரை டிக்கெட் ஒன்றையும் மரியாதையாக எடுத்துக் கொடுத்துவிட்டான் வாலிபன்.

''உன்னுடைய டிக்கெட்

எங்கே?'' என்று அதட்டினார் டிக்கெட் பரிசோதகர்.

பதில் இல்லை. பேந்தப் பேந்த விழித்தான்.

அடுத்த ஸ்டேஷனில் அவனை இறக்கி அழைத்துச் சென்றார் போலீஸ்காரர்.

* * *

''என் ஜோசியம் எப்படி?'' என்றேன், கிராமத்துப் பெரியவரிடம் மூன்று ரூபாயைத் திரும்பக் கொடுத்த வண்ணம்.

''பலே ஜோர்!..ஆனால் தட்சிணைக்கு அந்தப் பவுண்டன் பேனா ஈடாகுமா என்பது சந்தேகம் தான்!'' என்று சிரித்தார் அவர்.

''நியாயப்படி இது உங்களுடையதுதானே?'' என்று பேனாவையும் எடுத்துக் கொடுத்தேன் அவரிடம்.

அவர் பேரனுடைய கண்களில் ஒளி தெரிந்தது!

ஊர்சுற்றிகள் சங்கம்

இதயன்

'ஊர் சுற்றிகள் சங்க'த்தின் செயலாளனுன சங்கர சுப்புவின் வீட்டின் பின்புறத் தோட்டம். காலை 10-மணிக்கு மேல் இருக்கும். சங்கத்தின் அங் கத்தினர்கள் கூடுகின்றனர். அன் றைக் கூட்டத்தின் தலைவன் சுப்புணி வருகிருன். எல்லோரும் பாடுகிருர்கள்.

(பாட்டு)

எல்லோரும்: கோடி வீட்டுச் சுப்பு ணிக்குக் கொண்டாட்டம்! கொண்டாட்டம்!!

சங்கரசுப்பு: மதுரையிலே மாமா வீடுதான் இருக்குது. மாத மாதம் அங்கிருந்து அழைப்பு வருகுது.

எல்லோரும்: கோடி வீட்டுச் சுப்பு ணிக்குக் கொண்டாட்டம்! கொண்டாட்டம்!!

சங்கரசுப்பு: டில்லியிலே பெரிய அண்ணு வேலை பார்க்கருன். டில்லி செல்லப்பள்ளிக்கெல்லாம் 'டிமிக்கி' கொடுக்கிருன்.

எல்லோரும்: கோடி வீட்டுச் சுப்பு ணிக்குக் கொண்டாட்டம்! கொண்டாட்டம்!!

சங்கரசுப்பு: பம்பாயிலே சித் தப்பாவும் வேலை பார்க்கருர். பார்ப்பதற்கு வருஷம் தோறும் பவனி செல்கிருன்.

எல்லோரும்: கோடி வீட்டுச் சுப்பு ணிக்குக் கொண்டாட்டம்! கொண்டாட்டம்!!

(பாட்டு முடிகிறது)

சங்கத்தின் செயலாளன் சங்கர சுப்பு எல்லோரையும் அமைதியாய் இருக்கும்படி கையமர்த்திவிட்டுப் பேசுகிருன்.

சங்கரசுப்பு: ஊர் சுற்றும் உயர்ந்தோர்களே! பார் சுற்றும் பார்த்திபர்களே! உங்களில் ஒவ் வொருவரும் இன்று பள்ளிக்கூடத் திற்குச் செல்லாமல் 'டிமிக்கி' கொடுத்துவிட்டு நமது சங்கக் கூட்டத்திற்கு வந்திருப்பது உங்க ளுக்கு நமது சங்கத்தின் மேலுள்ள அபிமானத்தையும் நம்பிக்கையை யுமே காட்டுகிறது. இது நமது சங்க அங்கத்தினர் யாவரும் பெரு மைப் படுவதற்கு உரிய விஷய மாகும். பள்ளிக்கூட ஆஜர்ப் புத்த கத்தில் இந்த ஒரு மாத காலமாகத் தனது வருகையைப் பதிப்பிக்காத 'பழம்' பெருமை வாய்ந்த தெற் குத் தெரு திருவேங்கடம்கூட இன்று நமது கூட்டத்திற்கு வந் திருக்கிருன் என்ருல் நமது சங்கம் உண்மையிலேயே நல்ல முறையில் வளர்ச்சியடைந்து வருகிறது என்பதற்கு வேறு என்ன அத் தாட்சி வேண்டும்? அவனுக்கே இந்த மாதத்திய 'டிமிக்கி நெ. 1' என்ற பட்டமும் பரிசும் வழங்கப் படும் என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் அறிவிப்பதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

[எல்லோரும் கைதட்டித் தங் கள் மகிழ்ச்சியைத் தெரிவிக் கிருர்கள். ஆனுல் 'மரமேறி' மாதவன் மட்டும், தானும் 30 நாட்கள் வரை வகுப் புக்கு 'டிமிக்கி' கொடுத்த தாகவும், ஆனுல் கடைசி நாள் ஆசிரியர் மறந்து விட்டு வருகை போட்டு விட்டதாகவும் பக்கத்து நண்பனிடம் கூறி விசனப் படுகிருன்.]

சங்: அமைதி! அமைதி! அடுத்த தாக நான் கூற வந்த விஷயம் இன்றைக் கூட்டத்தின் மதிப்புக் குரிய தலைவனைப்பற்றிக் கோடி வீட்டுச் சுப்புணியைத் தெரியாத வர்கள் இந்தக் கூட்டத்திலேயே ஒருவரும் இருக்கமுடியாது. ஏன், இந்த ஊரிலேயே ஒருவரும் இருக்க

மாட்டார்கள் என்றே சொல்லலாம்.

கூட்டத்தில் ஒரு குரல்: ஏன் இருக்கப் போகிறார்கள்? அவன் உடைக்காத கண்ணாடி ஜன்னல்கள்தான் இந்த ஊரிலேயே கிடையாதே!

சங்: சைலன்ஸ்! மேலும், இவன் தனக்கு இந்த ஊரில் இருக்கும் புகழ் பற்றாதென்று வெளியூர்களிலும் சென்று தனது புகழைப் பரப்பி வருகிறான்! நமது சங்க அங்கத்தினர்களிலேயே அதிகமாக ஊர்களைச் சுற்றி ஆழ்ந்த அநுபவம் பெற்ற இந்த ஆன்றோனை நமது இன்றைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும்படி கேட்டுக் கொள்வதோடு ஊ. சு. சங்கத்தின் சார்பாக 'ஊர் சுற்றி உலகநாதன்' என்னும் பட்டத்தையும் அளிக்கிறேன்.

[கூட்டத்தினர் வீடே அதிரும்படியாக ''ஊர் சுற்றி உலகநாதன் வாழ்க!'' என்று கோஷமிடுகின்றனர். சங்கர சுப்பு கூட்டத்தினர் சார்பாக 'ஊர் சுற்றி உலகநாதன்' என்று அழகாக எழுதப்பட்டிருக்கும் தாளைச் சுப்புணியிடம் கொடுக்கிறான். தாளின் பின்பக்கத்தைப் புரட்டிப் பார்த்த சுப்புணி அது தன்னுடைய பழைய 'ப்ராக்ரஸ் ரிப்போர்ட்' என்பதைக் கண்டதும் முகத்தைச் சுளிக்கிறான். கூட்டத்தினர் முகங்களில் லேசான புன்முறுவல் தவழ்கிறது.]

சுப்புணி: (எழுந்து பேசுகிறான்) டியர் மெம்பர்ஸ் ஆப் தி ஆனரபிள் டிமிக்கி சொசைட்டி!

['தமிழில் பேசு' என்று கூட்டத்தினர் கத்துகின்றனர்]

சுப்புணி: மன்னிக்கவும்; மன்னிக்கவும். பாருங்கள்! அடிக்கடி டில்லி, பம்பாய் என்று போய்வருவதால் ஆங்கிலம்தான் என்னுடைய வாய்க்கு வந்து விடுகிறது!

[''ஆமாம்! ஆமாம். அதனால்தான் ஆங்கிலத்தில் இந்தத் தடவை உனக்கு முட்டை போட்டிருக்கிறார்கள்!''

போலீஸ்காரர் மனைவி: என்னாங்க! உங்கள் மகன் பண்ற அமர்க்களத்தை சகிக்க முடியல்லியே! வெல்லத்தைத் திருடறதும் சக்கரை டப்பாவைத் திருடறதும்-அப்பப்பா.. பேசாமே ஒரு நாளு கொட்டடையிலே அடைச்சு வையுங்களேன்!

என்று சோனிப் பயல் சோமு கூறியது அவன் காதில் விழாமல் போய் விடுகிறது.]

என்னை இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க அழைத்த சங்கர சுப்புவுக்கு என் நன்றி உரித்தாகுக! இன்றுதான் உங்களுக்கு நான் என் ஆழ்ந்த அநுபவக் கருத்துக்களை அள்ளி அள்ளி வீசப் போகிறேன்.

பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் எப்போதும் ஊர் சுற்றிக் கொண்டே இருப்பதில் உள்ள இன்பம் வேறு எதிலுமே இல்லை என்று சொல்லலாம். ஆனால் அதற்காக நாம் எல்லா நாளும் விடுமுறையாகவே இருக்கவேண்டும் என்று விரும்பக்கூடாது. அதற்குப் பதிலாக விடுமுறை விடுவதை நாம் முழு மூச்சுடன் எதிர்த்துப் போராடவேண்டும். ஏனென்றால் விடுமுறை இல்லாமல் பள்ளிக்கூட நாளாக

இருந்தால்தான் நாம் வகுப்புக்குச் செல்லாமல் 'டிமிக்கி' கொடுத்துவிட்டு வீட்டுத் தொந்தரவு இல்லாமல் சொந்த அலுவல்களைக் கவனிக்கலாம். அவ்வாறு செய்வதைப் போன்ற உயர்ந்த காரியம் உலகத்தில் வேறு இல்லை என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்! விடுமுறை நாளாக இருந்தால் 'டிமிக்கி' என்னும் சொல்லே இருக்காதல்லவா? வீட்டு வேலையும் நம்மைத் தொத்திக் கொள்ளும். எனவே விடுமுறையே கூடாது என்று நாம் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும்.

['ஆம்! ஆம்!' என்று கூட்டத்தினர் இக்கருத்தை வரவேற்கின்றனர்.]

அடுத்ததாக, நம்மைப்போன்ற நல்லோர்களால் உலகில் எவ்வளவு நன்மை ஏற்படுகிறது என்பதை உலகத்தார் சிந்தித்துப் பார்க்கும்படி செய்ய வேண்டும். இரண்டு மூன்று வருஷங்களாக ஒரே வகுப்பில் இருந்த இடத்திலேயே உட்கார்ந்திருக்கும் பேறு பெற்ற நாம், அவ்வாறு உட்கார்ந்திருப்பதால் பெஞ்சுகள் தேய்ந்து பெரும் நஷ்டமாகுமே என்று இரக்கப்பட்டு வகுப்பிற்கு டிமிக்கி கொடுத்துவிட்டு ஊரைச் சுற்றுகிறோம். இது பொறுக்கவில்லை சிலருக்கு. நம்மை 'ஊர் சுற்றிகள்' என்று வாழ்த்துவதற்குப் பதிலாகத் தூற்றுகிறார்கள். இந்தச் சூழ்நிலை மாற வேண்டும்! ஊரைச் சுற்றுவதற்கு நாமென்ன 'டாக்ஸி'யா கேட்டோம்? இல்லையே! இருக்கவே இருக்கிறது கம்பி வளையம். 'காற்றிலேறியவ் விண்ணையும் சாடுவோம்' என்று கம்பி வளையங்கள் ஓடும் ஓட்டத்தில் வெயிலென்றும் பாராமல் தார் ரோட்டில் நாம் வளையங்களை உருட்டிக்கொண்டு ஆனந்தமாகச் செல்வதைக் கண்டதும் சூரியனே மலைத்து விடுகிறான். இப்படியிருக்க நம் போன்றோர்களை ரசிப்பதை விட்டு விட்டுச் சிலர் நம்மைத் தூற்றுகிறார்களே, இவர்களையெல்லாம் சும்மா விடக் கூடாது. காதைத் திருகிக் கழியால் அடிக்க வேண்டும்.

[''ஆம், அப்படித்தான் செய்ய வேண்டும்'' என்று கத்துகின்றனர் பலர்.]

இனி, பல வெளியூர்களில் நம் சகாக்கள் எவ்வாறு பற்பல வினோதத் திருவிளையாடல்கள் புரிகின்றனர் என்பதை உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். ஆனால் அதையெல்லாம் விரிவாகச் சொல்லப் போனால் கழுதை வாலில் கட்டிய தகரடப்பா எப்படி முடிவில்லாமல் சத்தம் செய்துகொண்

டிருக்குமோ அதுபோல நீண்டு கொண்டே போகும். எனவே நான் எனது அநுபவக் கருத்துகளை யெல்லாம் தொகுத்து ஒரு புத்தக மாக வெளியிட உத்தேசித்துள் ளேன். அதில் வெளியூர்களிலுள்ள நம் சகாக்கள் எவ்வாறு பள்ளிக்கு 'டிமிக்கி' கொடுக்கின்றனர், பிறர் அறியாமல் கண்ணுடி ஜன்னல்களை உடைப்பதற்கு என்ன வழிகளைக் கையாளுகிருர்கள், தெரியாமல் மாமரங்களில் ஏறி மாங்காய் பறிக்க என்ன முறைகளைக் காலாளுகிருர்கள் என்பதையெல் லாம் நன்ருக விளக்கப் போகி றேன். வாங்கிப் படித்துப் பய னடையுங்கள்.

[சுப்புணி பிரசங்கத்தை முடிக்கிருன். கரகோஷம் வானைப் பிளக்கிறது.]

சங்: அருமை நண்பர்களே! தலைவனின் அரிய பிரசங்கத்தைக் கேட்டீர்கள். சில காலமாக நமது சங்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் சிலர் ஒரு புகார் செய்து வருகின் றனர். தற்போது இந்தப் பக்கத் தில் கழுதைகளைக் காண்பது குதி ரைக் கொம்பாக இருக்கிறதாம். இதனால் கழுதை வாலில் தகரத் தைக் கட்டிவிடும் சில புண் ணியாத்மாக்கள் தங்களின் கைங் கரியத்தை நிறைவேற்ற முடியா மல் போய்விடுகிறதாம். எனவே நமது சங்கம் ஒரு நிதி திரட்டிக் கைங்கர்யம் தொடர்ந்து நடக்க வேண்டும் என்பதுதான் அந்த நண்பர்களின் மணியான யோசனை. எனவே இது பற்றி ஓர் அவ சரத் தீர்மானத்தையும் நிறை வேற்ற வேண்டும்.

[பிறகு சுப்புணி தீர்மானங் களை வாசிக்கிருன்.]

சுப்: முதலாவதாக, ஒரு வருஷத் தில் எல்லா நாட்களும் பள்ளிக்கூட நாட்களாகவே இருக்க வேண்டும்; விடுமுறையே கூடாது என்று மதிப்பிற்குரிய 'டிமிக்கி சங்கம்' கல்வி அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறது.

இரண்டாவதாக ஊர் சுற்றும் பெருமக்களை வாழ்த்தாது தூற்றும் மனிதர்களைக் கடுமையாகத் தண் டிக்க வேண்டும் என்று அரசாங் கத்தை இச்சங்கம் கோருகிறது.

கடைசியாக, கழுதை ஒன்று வாங்குவதற்கு ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் எல்லோரும் நிதி உதவி செய்ய வேண்டும் என்றும் இச் சங் கம் கேட்டுக் கொள்கிறது.

[ஏக மனதாக இத் தீர்மானங் கள் நிறைவேற்றப் படு கின்றன.

சங்: நண்பர்களே! தலைமை தாங் கிய சுப்புணிக்கும், அவன் பிரசங் கத்தைப் பொறுமையோடு கேட் டுக்கொண்டிருந்த உங்களுக்கும் என் நன்றி!

[இந்தச் சமயத்தில், கணக்கு வாத்தியார் ஸ்ரீமான் கர்ண கடூரம், பிரசன்னமாகிருர். கூட்டத்தினர் மெதுவாக நழுவி விடுகின்றனர். சுப் புணி மட்டும், வாத்தியாரிடம் மாட்டிக் கொள் கிருன். அவர் அவ னைக் காதைப் பிடித்துத் திருகி அழைத்துச் செல் லும் 'கண் கொள் ளாக் காட்சி'யை ஊ. சு. சங்க அங் கத்தினர்கள் குப் பைத் தொட்டி களின் பின்ஞ லிருந்து பார்த்துப் பார்த்து ரசிக்கின் றனர்.]

கண்ணன் வருகிறான்!

அமுதன். வேங்கடராமன்

கலைமகளின் கருணை யாலே
கண்ணன் வருகிறான் - எங்கள்
கண்ணன் வருகிறான் - மிக்க
விலைநயமாம் என்ற போதும்
மகிழ்ச்சி தருகிறான் - பெரிதும்
மகிழ்ச்சி தருகிறான். (1)

சிக்காணி பாப்பா வுக்குச்
சின்னக் கதைகளாம் - வண்ணச்
சித்திர ங்களாம் - எங்கள்
அக்கா தங்கை பாடிடவே
அழகுப் பாடலாம் - சுவை
ஒழுகும் பாடலாம். (2)

அண்ணா படிப்ப தற்கும்
அருமைக் கட்டுரை - நலம்
அமைந்த நற்கதைப் - பல
வண்ணமெலாம் கொண்டு கண்ணன்
உலவி வருகிறான் - இன்ப
உவகை தருகிறான். (3)

ஆசை யோடு வீட்டிலுள்ள
அத்தனை பேரும் - நாங்கள்
அத்தனை பேரும் - 'கண்ணன்'
நேசன்வந்து சேரு நாளில்
நின்று நோக்குறோம் - 'தபால்'
என்றால் பூக்கிறோம். (4)

யார் குற்றவாளி?

'கோபாகி'

1

"ஏண்டா, தடிமரம் மாதிரி நிற்கிறாய்? கேட்பதற்குப் பதில் சொல். பணத்தை எடுத்தாயா இல்லையா?''

கையில் வைத்திருந்த பெல்டைச் சுழற்றிய வண்ணம் கண்களில் கனல் பறக்க மோகனைப் பார்த்துக் கேட்டார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கனகராஜன். அவரிடம் சிக்கிய குற்றவாளிகளை அவர் கவனிக்கும் விதமே அப்படித்தானே! அதற்குத் தன் மகனால் மட்டும் என்ன விலக்கா?

மோகனின் கண்களில் கலக்கம் ஒரு சிறிதும் இல்லை. மாறாக - ஒரு ஆழமான தெளிவு-புயலுக்குப்பின் ஏற்படும் அமைதியின் சின்னம் - காணப்பட்டது. அதில் ஓரளவு வெறுப்பும் கலந்திருந்தது என்றும் கூறலாம்.

''ஆம், அப்பா! நான்தான் பணத்தை எடுத்தேன். நானே குற்றவாளி!''

சொல்லி முடிக்கவில்லை மோகன். அதற்குள் விழிகள் பனித்தன அவனுக்கு. விம்மல் கிளம்பியது அவன் அடித்தொண்டையிலிருந்து.

அவ்வளவுதான்! கோபம் மீறிய கனகராஜன் கையிலிருந்த பெல்ட்டால் நன்கு 'வாங்கி'விடவே மோகன் சுருண்டு விழுந்துவிட்டான்.

''நன்றாயிருக்கிறது, நீங்கள் செய்வது! ஏதோ தெரியாத்தனமாக எடுத்துவிட்டான் என்றால் இப்படியா அடிப்பார்கள்? நயமாகக் கேட்டால் குழந்தை சொல்ல மாட்டானா?'' என்று கூறிக்கொண்டே அங்கே வந்த பங்கஜம்-தன் மகனின் நிலையைக் கண்டதும் 'ஓ'வென்று அலறி அழ ஆரம்பித்துவிட்டாள். என்ன இருந்தாலும் பெற்ற பாசம் விடுமா?

கனராஜனுக்குத் தம் மனைவியின் பேரில் இப்பொழுது ஆத்திரம் திரும்பியது.

'தவருன வழியில் செல்லும் ஒரு மகனைத் தண்டித்தால் இவள் இப்படி விழுந்து அழுது ஊரைக் கூட்டுகிருளே! சே..என்ன மடத்தனம்!'

அவர் மனம் இவ்வாறு எண்ணினுலும் உள்ளத்தின் ஒரு மூலையில் அவரையுமறியாமல் - அவரது உத்தரவுக்கும் அடங்காமல் - திரியின் நுனியில் வைக்கப்பட்ட தீயெனப் பாசம் பற்றத் தொடங்கியது. ஆனல் மறுகணம்—

'சே! என்ன திருட்டுத்தனம் இந்தச் சிறுவயதிலேயே! அடுத்தாற்போல் இவன் அண்ணன் குமார் இல்லையா? தன் படிப்பு உண்டு, தான் உண்டு என்று இருக்கும் அவனல்லவா பிள்ளை! இவன் என் பிள்ளையே அல்ல!' என்றே மனம் முடிவு கட்டியது. மேலும் அங்கே இருக்க மனம் இல்லாதவராய், அரற்றும் தன் மனைவியையும் மயங்கிக் கிடக்கும் மகனையும் விட்டு விட்டுத் தொப்பியை வைத்துக் கொண்டு வெளியே சென்று விட்டார். அவர் சென்ற ஐந்து நிமிடங்களில் அங்கே ஆஜரானுன் மூத்தவன் குமார். ஆனுல் அங்கிருந்த நிலைமை அவனை என்ன செய்ததோ-பேசாமல் வந்தவழியே திரும்பி வெளியே சென்றுவிட்டான்.

2

கனகராஜனுக்கு வெகு நாட்கள் கழித்துப் பிறந்த அருமைப் பிள்ளைகள் குமாரும் மோகனும். தான் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கும்போதே தம் பிள்ளைகளை நன்கு படிக்க வைத்து, நல்ல நிலையில் வைத்துவிட வேண்டும் என்று அவர் கனவு காணுத நாட்களே இல்லை எனலாம். அதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளோ என்ருல்—எழுதவே எண்ணிலடங்காது.

மூத்தவன் குமார் படிப்பில் 'சுமார்' என்ற தரம்தான். பிறர் வம்புகளில் தலையிடமாட்டான். எதிர் வீட்டு நாகராஜனுடன் வன் பார்க்காத சினிமா கிடையாது. ஆனல் அவன் பிறந்தவுடன்தான் தமக்குப் பிரமோஷன் ஆயிற்று என்ற காரணத்தாலேயே கனகராஜனுக்கு அவன்மீது சற்றுப் பிரியம் அதிகம்.

இளையவன் மோகன். பள்ளியிலேயே அவன்தான் முதன்மையாகத் தேறுவான். அவ்வளவு சூடிகையானவன். ஆசிரியர்கள் அனைவருக்குமே இவன்மீது தனிப் பற்றுதல் உண்டு. இவன் ஒரு நாள் பள்ளிக்கு வரவில்லையென்ருல் அன்று வகுப்பில் களையே இராது என்பது ஆசிரியர்களின் ஏகோபித்த முடிவாகும். இவனுக்கு அண்ணன்மீது உள்ள அன்பு குமாருக்கு இவன்மீது கிடையாது.

* * *

சில தினங்களுக்கு முன் பள்ளியிலிருந்து திரும்பி வந்த மோகன் படியிலேயே நின்று விட்டான், உள்ளே பெற்ருேர் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு. தகப்பனுர் தாயிடம் இரைந்து பேசும் குரல் கேட்டது.

''நீங்கள் என்ன சொன்னுலும் எனக்கு என்னமோ நம் மோகன் எடுத்திருப்பான் என்றே எண்ண முடியவில்லை.''

வாஞ்சையுடன் கூடிய தாயின் குரல் அவன் காதில் தெளிவாக விழுந்தது.

''பங்கஜம், இரண்டு நாட்களாக என்னைக் கண்டவுடன் மோகன் முகத்தைத் திருப்பிக் கொண்டு செல்வதை நீ கண்டால் இப்படிக் கூறமாட்டாய். குற்றமில்லாதவனுய் இருந்தால் ஏன் அப்படி ஒளியவேண்டும்?''

உறுதியான கண்டிப்பு நிறைந்த குரலில் கேட்டார் தந்தை.

'ஆம்! நான் ஏன் ஒளிய வேண்டும்? நான் குற்றவாளிதான். எடுத்தது உண்மைதான்..ஆனுல்.. எதை? ஏன்? இதற்குப் பதில் நான் எப்பொழுதும் கூறமாட்டேன்.'

இறுகிப்போன உள்ளத்தின் பிரதிபலிப்பு அவன் முகத்தில் காணப்பட்டது.

'உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்!' தீர்மானித்த

யின் உள்ளே நுழைந்தான். தந்தையும் தம் தீர்மானப்படி செய்து விட்டார் முன் கூறியதுபோல்.

3

எவ்வளவு நேரம் மயங்கிக் கிடந்தானோ! கண் விழித்ததும் கண் கலங்கி அமர்ந்திருக்கும் அன்னையைத்தான் கண்டான், தன் கண்ணீர்த் திரையின் வழியாக.

'ஆகா! அன்னையின் பாசம்தான் எவ்வளவு உயர்ந்தது! ஆனால் தந்தை இப்படி முரட்டுத்தனமாக நடந்து விட்டாரே?'

மோகனின் மனம் கலங்கியது.

''அப்பா மோகன்..இதோ பாருடா இந்தச் சர்பத்தைச் சாப்பிடுடா'' என்று தாய் பக்கத்தில் அமர்ந்து கெஞ்சினாள். ஊஹூம், அவனுக்கு அந்தச்சமயம் சர்பத்தா வேண்டும்?....இல்லை....அவன் வேண்டுவது....

''வேண்டாம் அம்மா..நீ பேசாமல் போ. நான் சிறிது நேரம் படுத்துக் கொள்கிறேன்'' என்று அன்னைக்குப் பதிலளித்து விட்டு எழுந்து தன் படுக்கைக்குச் சென்று விழுந்து மனமார அழுதான், தன் நெஞ்சுச் சுமை இறங்க. ஆனால் சுமை இறங்கவில்லை, இன்னும் அதிகரித்தது வெறுப்பின் மிகுதியால்.

'மூன்றும் பாரம் படிக்கும் நான், பள்ளியில் முதல்வன் என்று பெயர் வாங்கும் நான் திருடனா? அப்படியானால் ஏன் திருடினேன்? யாருக்காக? இதையெல்லாம் விசாரிக்காமல் தண்டித்துவிட்டாரே! உண்மைத் திருடன் யார் என்பதை அவர் அறிவாரா? சே! இவ்வளவு கொடூர மனம் கொண்டவருக்கு எப்படியாவது பாடம் கற்பிக்க வேண்டும்!'

இப்படியே இரவு முழுதும் யோசனைகள் செய்துகொண்டே கண்ணயர்ந்து விட்டான்.

* * *

பொழுது புலர்ந்தது. கையில் ஆவி பறக்கும் காபியோடு வழக்கம்போல் மோகனை எழுப்ப வந்த பங்கஜம் வெகுநேரம் எழுப்பியும் மோகன் எழுந்திருக்காமலிருக்கவே போர்வையை விலக்கினாள். அப்படியே திகைத்து நின்றுவிட்டாள்; ஆம்! அங்கே மோகன் இல்லை! இரு தலையணைகளின் நீண்ட வடிவமே மோகனைக் காட்சியளித்தது. பார்த்தாள், அலறினாள். அவள் அலறலைக் கேட்டு, வாயிலில் தினத்தாள் படித்துக்கொண்டிருந்த கனகராஜனும் ஓடி வந்து பார்த்து, அவரும் பிரமித்து நின்று விட்டார்.

''ஐயோ! என் செல்வம் மோகனைக் காணவில்லையே. எங்கேயாவது தேடிப் பாருங்களேன். நேற்று நீங்கள் அடிக்கும்போதே சந்தேகப் பட்டேனே!'' என்று தலையில் கை வைத்துக் கொண்டு பங்கஜம் அழுவதைப் பார்த்தார்.

''சின்ன வயசிலே காய்ச்சல் வந்து, பிழைக்க மாட்டாமல் கிடந்தேனாம்! பாட்டி சொன்னா!''

''ஊம்...அப்புறம் பிழைத்தாயோ?''

''தெரியாது! பாட்டியைத்தான் கேட்கணும்!!''

கையிலிருந்த தினத்தாள் கீழே நழுவி விழுந்தது. உள்ளத்தில் பற்றிய பாசம் இப்பொழுது உடல் முழுவதையும் பற்றிக் கொள்ளவே அவர் தத்தளித்தவராய் அப்படியே நாற்காலியில் சாய்ந்து விட்டார்.

கலவரம் கேட்டு விழித்து எழுந்து வந்த குமாரும் மோகனைக் காணாது வியப்புற்றான். ஆனால் அவன் வியப்பு கணநேரந்தான்! மறுகணம் இரு கண்களிலிருந்தும் நீர் வழிய, 'தடா' லென்று தன் தந்தையின் காலடியில் வீழ்ந்து கதறினான்.

''அப்பா..அப்பா...நான்தான் கொடியவன். நான்தான் குற்றவாளியப்பா, மோகன் இல்லை. பணத்தைத் திருடியதும் தாங்கள் வருவதைக் கண்டு பயந்து சட்டென்று மோகனின் பையில் திணித்துவிட்டுப் போய்விட்டேன். ஆனால் பாவியான என் பொருட்டு நிரபராதியான மோகன் நேற்று அடிபட்டான். அப்பா..மோகன் நல்லவன். நான்தான்...''

குரல் தழுதழுக்கக் கூறினான் குமார். கனகராஜனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

'நல்லவன் என எண்ணியிருந்த குமாரா திருடன்?' அவர் உள்ளம் ஊசலாடியது, கடமைக்கும் பாசத்துக்குமிடையில், முடிவில் பாசம் தான் வென்றது.

''குமார், எழுந்திரு அப்பா; நீயானால் என்ன? இருவரும் என் கண்களல்லவா? ஒரு கண் தவறிழைத்ததற்காக மறு கண்ணைக் குத்திக் கொண்ட—குருடன் - நான்தான். சரி வா. மோகனைக் கண்டுபிடிப்போம்.''

கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டு இருவரும் வெளியே வரவும் ஒரு டாக்ஸி வாசலில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. அதிலிருந்து ஒருவன் இறங்கி வந்தான்.

''சார் நீங்கள்தானே கனகராஜன். தங்கள் பையன் மோகன் இதோ காருக்குள் இருக்கிறான், எங்கள் காரில் அடிபட்டவனாக. தயவு செய்து அவனை உள்ளே அழைத்துச் செல்லுங்கள்.''

இவ்வாறு அவன் கூறியதைக் கேட்டதும் குமார்தான் முதலில் காரின் பக்கம் விரைந்தான்.

''ஐயோ தம்பி. உனக்கா அடி! ஒரு திருடனுக்காக—நீ திருடனாக மாறித் தண்டனை அடைந்தாயே! உனக்கா அடி? ஐயோ..மோகன்'' என்று கதறியவண்ணம் தம்பியை இறுகத் தழுவிக் கொண்டான்.

''அண்ணா, நீ உன் தவற்றை உணர்ந்து திருந்தினாயே, அதுவே எனக்குப் போதும். உனக்காக நான் எந்தத் தண்டனையையும் ஏற்கத் துணிந்து விட்டேன், அண்ணா.''

கண்கலங்க, கைகள் அண்ணனைத் தழுவக் கூறினான் மோகன். ரத்த பாசத்தின் தன்மையைக் கண்டு அனைவரது கண்களும் கலங்கின. அதோ! பங்கஜத்தின் கண்களிலும் நீர் ததும்புகிறது! ஆனால் தன் மக்கள் இருவரும் மாசில்லாத இளம் உள்ளங்கள் என்பதை அறிந்த அவளுக்கு அது இப்பொழுது ஆனந்தக் கண்ணீர்தான் என்பதில் ஏதும் ஐயமுண்டோ?

எதிர்பாராத முடிவு

ப. கி. மூர்த்தி

கடற்கரையில் ஒரே கூட்டமாக இருந்தது. அலைகளின் ஓசையைக் கேட்பதிலும், கடலின் அழகைப் பார்ப்பதிலும் எத்தனையோ துன்பங்களை மறக்க முடிகிறது. பணச் செலவு இல்லாமல் பொழுது போக்கும் இடம் கடற்கரை ஒன்றுதானே! காசு இல்லாவிட்டாலும் எத்தகைய அருமையான இன்பக் காட்சிகளைப் பார்க்க முடிகிறது!

அது ஒரு தனி உலகம்! அந்த உலகத்தில் தன்னை மறந்து ஈடுபட்டிருந்தார் ஒருவர். அவர் கிருப்பு, கடிவாளம் இல்லாத குதிரைமாதிரி தன்னிச்சையாகப் பறந்து கொண்டிருந்தது. அதுவும் ஓர் அழகாகத் தானிருந்தது. அவர் அணிந்திருந்த கோட்டும் சூட்டும் கண்டு, அவர் ஒரு பெரிய இடத்துப் புள்ளி என்று ஊகிக்கலாம்!

அவருக்கு அருகே ஒரு சிறுவன் - பதினாறு வயது மதிக்கலாம் - தள்ளாடிக்கொண்டே வந்தான். வந்தவன், சற்று நின்றான். தயங்கினான். அவன் பார்வை அந்த 'சூட்-கோட்' ஆசாமியின் மேல் விழுந்தது. ஒரு வறண்ட புன்னகை அவன் உதட்டோரம் நெளிந்தது!

தள்ளாடிக் கொண்டே அடி எடுத்து வைத்தவன் 'பொத்' தென்று, வெட்டிய மரம்போல் சாய்ந்தான்.

தன் பக்கத்திலே விழுந்தவனைக் கண்ட அந்தப் பெரியவர் பதறி விட்டார் பதறி.

சுற்று முற்றும் பார்த்தார். யாரும் உதவிக்கு வருவதாகக் காணோம்! ஓடினார், கடலை நோக்கி, தம் கைக் குட்டையை நனைத்துக் கொண்டு ஓடிவந்தார்.

பாவம், எவ்வளவு இரக்கமுள்ள நெஞ்சம்!

தன்மீது குளிர்ந்த நீர் படவே அவன் சற்று விழியைத் திறந்தான்! திறந்த விழி, திரும்பவும் மூடிக் கொண்டன!

''தம்பி....!'' என்றார் அவர். அவன் பேசவில்லை. விரலை வாயருகே கொண்டு சென்று ஜாடை காட்டினான். அதைப் புரிந்து கொண்ட அவர் சோடா ஒன்று வாங்கி வந்து தாகத்தைத் தணித்தார்.

சற்று நேரம் அமைதி!

அந்தப் பையனின் உடலிலே சற்று அசைவுகள் உண்டாயின. எழுந்து உட்கார்ந்தான்.

''ஏன் தம்பி..உன் பெயர் என்ன..?''

''கோபு....''

—எங்கிருந்தோ ஒலித்தது போலிருந்தது, அவன் குரல்.

''கோபுவா..? நல்ல பெயர்

''இந்தக் காலத்திலே யாரையுமே நம்ப முடியல்லே! சுத்த அயோக்கியன்கள்..''

''ஏன்?''

ஒரு கடைக்காரன் செல்லாத இரண்டணாக் காசைக் கொடுத்து ஏமாத்திப்பிட்டான்!''

''அப்புறம்?''

''நான் ஓட்டல்லே டிபன் சாப்பிட்டுட்டு நைஸா காசோடு காசா சேர்த்துக் கொடுத்துட்டு வந்தேன்!''

தான்! ஆமாம்; ஏன் மயக்கம் போட்டு விழுந்தாய்?''

அவர் குரலிலே கனிவு இருந்தது. பார்வையிலே பரிதாபமிருந்தது. மனம் பாகாக உருகிக் கொண்டிருந்தது. ''சார்..சார்..ரெண்டு நாளாகச் சாப்பிடல்லே சார்! கஞ்சி இல்லாட்டி மயக்கம் வராமலா இருக்கும்?''

''ஐயோ பாவம்! உனக்கு யாருமில்லையா?''

''யார் இருக்காங்க? என்னை அன்பு காட்டி ஆதரிக்க யார் இருக்காங்க? அப்பா, மில்லிலே கூலி வேலை செஞ்சுக்கிட்டிருந்தாரு! ஒரு விபத்துலே அவரு உயிரு போயிடுச்சி! எங்கப்பா உயிருக்கு ஈடாக அவுங்க முதலாளி எப்படியோ மனசு வைத்து நூறு ரூபா கொடுத்தாரு! அதை வெச்சுக்கிட்டு என் அம்மா, தங்கைகள் இரண்டு பேர், நான்—ஆக இத்தனை பேர்களும் எத்தனை நாட்களுக்குக் காலம் தள்ள முடியும்? வறுமையில் வாடினோம்! ஏன் என்று கேட்க ஆளில்லை! சிறிது கடன் வாங்கி என் தாய் இட்டிலிக் கடை வைத்தாள். எதிர்பாராத விதமாக என் தாயாரின் புடைவையில் தீப் பற்றி வீடே பற்றிக் கொண்டது! குடிசைதானே? பற்றாமல் என்ன செய்யும்?

''சாம்பலாகிவிட்ட வீட்டிலே என் தாயாரின் எலும்புக்கூட்டைத்தான் கண்டோம். 'அம்மா எங்கே? எங்கே அம்மா?'—இப்படிக் கேட்டு விம்மிக் கொண்டே - அதே ஏக்கத்தில் என் தாயைத் தேடிப் போய் விட்டாள் கடைசித் தங்கை. 'பசி., பசி..' என்று மற்றொரு தங்கையும் துடித்துத் துடித்து நேற்று இரவு - அவள் வழியைப் பின்பற்றிச் சென்றாள். நான் என்ன செய்ய முடியும்?''

மனமுருகக் கூறிமுடித்தான் கோபு. அவனுடைய கதை அவரின் நெஞ்சைப் பிழிந்துவிட்டது. அவரும் ஆரம்பத்தில் அல்லல்பட்டு, முன்னுக்கு வந்தவர் போலிருக்கிறது. இல்லையென்றால் யாரோ ஒருவனுக்காக அவர் ஏன் கலங்க வேண்டும்? பரிதாபப்படவேண்டும்? ''இந்தா தம்பி..பத்து ரூபாய்..செலவுக்கு வெச்சுக்கோ! சிறு வயதிலேயே இத்தகைய துன்பத்தை நீ அநுபவிக்க வேண்டியவனாகி விட்டதற்கு, என் மனம் வேதனைப்படுகிறது. பரவாயில்லை; இன்னும் இரண்டு நாட்கள் கழித்து என்னை நீ இந்த விலாசத்தில் சந்தித்தால் ஏதாவது வேலை போட்டுக் கொடுக்கிறேன்!'' என்று விலாசத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

* * *

மறுநாள் மாலை 'ராஜ் பவ'னில் ஒரே கூட்டமாக இருந்தது. வலது பக்கத்துக் கோடியில் இருவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். என்ன ஆச்சரியம்! அந்த இருவரில் நேற்றுக் கடற்கரையில் மயக்கம்

போட்டு விழுந்த பரிதாபத்திற்குரிய சிறுவன் கோபுவும் ஒருவன். இருவரும் ஜாலியாகப் பேசிக்கொண்டிருந்தனர். தனக்கு யாருமில்லை என்று கூறினானே—இப்போது இப்படி நெருங்கிப் பழகுகிறானே. ஒருவனிடத்தில் திடீரென்று ஏற்படக்கூடிய சிநேகிதம் இவ்வளவு அந்நியோன்யமாக இருக்காதே!

அவர்களிருவரும் உரக்கவே பேசிக்கொண்டிருந்தனர்.

‘‘ஏண்டா கோபு! இன்று ஒரே தடபுடலாக இருக்கிறாயே! ஏதடா பணம்? அப்பா கொடுத்தாரா?’’

‘‘பணமா, அப்பாவா? அது கெட்டது போ! அப்பாவா கொடுப்பாரு? நான் இருப்பதே தண்டம் என்றல்லவா திட்டுறார்! இது என் சொந்த முயற்சியாலே கெடச்ச பணம்டா...என் திறமையான நடிப்பிலே ஒருத்தரு ஏமாந்துபோய்..’’

‘‘நடிச்சியா..?’’

‘‘ஆமாண்டா! செலவுக்கு இல்லே; என்ன பண்றது? அப்பாவைக் கேட்டா ‘திருடப் போ’ன்னாரு! அதைவிட இது எவ்வளவோ மேலுன்னு கடற்கரைக்குப் போய் மயங்கி விழுந்தவன் மாதிரி நடிச்சேன்! என் மயக்கத்தைத் தெளிய வெச்சவருக்கிட்டே ஒரு அருமையான கதையை ஜோடிச்சிப் பத்து ரூபாய் தட்டினேன். எப்படி என் ஐடியா?’’ என்று இடி இடியென்று சிரித்தான், தன் அபார சாமர்த்தியத்தை வியந்து!

தன் முதுகை யாரோ தட்டுவதை உணர்ந்த கோபு திரும்பிப் பார்த்தான்.

பார்த்தவன் அரண்டு போய்ப் பின் வாங்கினான். அவன் கண்கள் நிலை குத்தி நின்றன. உடல் வேர்த்தது; மனம் பதறியது! அவனால் எதையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை! காரணம், கடற்கரையில் யாரிடம் பொய்க்கதை கூறி ஏமாற்றினானோ அதே நபர்தான் புன்முறுவலுடன், அவன் எதிரே நின்றுகொண்டிருந்தார்.

‘‘சார்..சார்..’’ அவன் குரல் நடுங்கியது.

அவர் சிரித்துக்கொண்டே, ‘‘தம்பி..பயப்படாதே! எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்! உனக்குச் சரியான தண்டனை கொடுக்கப்போகிறேன்!’’

‘‘சார்..! அடிக்காதீங்க சார்.. நான் தெரியாத்தனமா...இனிமே அப்படியெல்லாம்..!’’

‘‘அதெல்லாம் முடியாது?’’

‘‘முடியாதா! ஐயோ! நான் சொல்றதைக் கேளுங்க..!’’

‘‘முடியாது—நீ சொல்றதைக் கேக்க முடியாது! நான் சொல்றபடிதான் நீ கேட்கணும்!’’

‘‘சரி சார்; எப்படியாவது என்னை விட்டுட்டாப் போதும்! எத்





''1834-ஆம் வருஷம் எத்தனை யுத்தங்கள் நடந்தன?''

''நான்கு.''

''ரைட்! அவை என்னென்ன?''

''உம்..ஒன்றாவது, இரண்டாவது..? மூன்றாவது..நான்காவது..

''???..''

தனை முறை வேண்டுமானாலும் உங்கள் காலைப் பிடிக்கறேன்!''

''அட ஏன் தம்பி, அப்படிப் பயப்படறே! நான் ஒரு டைரக்டர். நன்கு நடிக்கத் தெரிந்த - என் மனத்திற்குப் பிடித்த ஒரு பையனைத் தேடிக்கொண்டிருந்தேன், இத்தனை நாட்களாக! யாரும் கிடைக்கவில்லை! உணர்ச்சியோடு உள்ள முருகக் கூறினாயே கதை; அதை உண்மையென்று நினைத்தேன்! இப்போதுதான் அத்தனையும் நடிப்பு என்று தெரிந்துகொண்டேன்! ஆகா! எத்தகைய அருமையான நடிப்பு! என்னையே ஏமாற்றிவிட்டாயே, இனி நீ பொய்யாக நடிக்க வேண்டியதில்லை: உண்மையாகவே நடிக்கலாம்!'' என்றார்.

'தன் குட்டு வெளிப்பட்டும் அதற்காகக் கோபிக்காது, நடிக்க வேறு எதிர்பாராத வாய்ப்பளிக்கிறாரே இவர் என்று கோபு திடுக்கிடுவான்- ஆச்சரியப் படுவான்' என்று நினைத்த டைரக்டர் ஏமாந்து நின்றார்.

''என்ன தம்பி, பேசாமெ இருக்கே; நான் சொன்னதைக் கேட்டு எந்த மாற்றமும் ஏற்படவில்லையே உனக்கு!'' என்றார்.

கோபு சிரித்தான். 'கடகட' வென்று அருவிச் சிரிப்புச் சிரித்தான். ''என்ன சிரிக்கறே! நம்பிக்கை ஏற்படவில்லையா?''

''சார்..இந்த முறையும் நீங்கள் ஏமாந்துட்டீங்க!''

''நானா....?''

''ஆமாம்; நான் இப்போ உண்மையிலேயே உங்களைப் பார்த்துப் பயந்தேன்னு நினைச்சீங்களா?''

''பின்னே....?''

''நடிப்பு சார், நடிப்பு! எங்களுக்குப் பின்னாலே நீங்க இருந்ததை கவனிச்சுக்கிட்டுத்தான் இருந்தேன்!''

''தெரிந்துமா இப்படிப் பேசினே!''

''வேணும்னுதான் சார்! நான் உண்மையிலேயே நடிக்க வேண்டுமென்று ஆர்வம் உடையவன் சார்! நீங்க டைரக்டர் என்பதும், நீங்க எடுக்கும் படத்துக்காக ஒரு பையனைத் தேடி அலைகிறீர்கள் என்றும் பத்திரிகையின் மூலம் ஏற்கனவே அறிந்தவன் நான். திடீரென்று உங்கள் முன்வந்து நடிக்கிறேன் என்றால்—நீங்கள் நம்புவீர்களா? எனக்கும்தான் வாய்ப்புக் கிடைக்குமா? ஏமாற்றம்தானே கிடைக்கும்! எனவேதான் மயக்கம் போட்டு, உங்களிடம் பொய்க்கதை கூறி உங்கள் கவனத்தைக் கவர்ந்தேன். நீங்கள் எங்களுக்குப் பின்னால் இருப்பதை அறிந்துதான்—தெரியாததுமாதிரி கடற்கரை நடிப்பு என்று விளக்கி என் நடிப்புத்திறமையைச் சூட்சமமாக உங்களுக்கு விளக்கிக் காட்டினேன்!'' என்றான்.

அதைக் கேட்ட டைரக்டர், ''நடிப்புச் சொல்லிக் கொடுக்கும் எனக்கே நடிப்புச் சொல்லிக் கொடுத்து விட்டாயே; நீ வெறும் சாமர்த்தியசாலி அல்ல—பலே சாமர்த்தியசாலி!'' என்றார்.

கோபு சிரித்துக்கொண்டே நின்றான்!

கதை: 'ஆர்வி' கடற் புலி சித்திரம்: ஸாமி

வந்த வழியே போகும் போது . . . .
இவளை எப்படித் தேற்றுவது! கடற்புலியை எப்படியும் இவள் பழிக்குப் பழி வாங்க முயல்வாளோ?
அப்பா! இப்பொழுது தான் என் ஆசை நிறைவேறியது! என் உள்ளம் குளிர்ந்தது!
இந்தக் காட்டு மிராண்டிகளை எப்படி ஆள்வது? பெரியவரே! எனக்கு இந்தப் பதவி வேண்டாம்! மெதுவாக இந்தத் தீவிலிருந்து தப்பித்தால் போதும் . . . . . .
கிழவரும் கடற்புலியும் பரிவாரங்களோடு செல்லும் போது . . . .
அப்படிச் சொல்லாதே! காட்டு மிராண்டிகளை கடல் வீரர்கள் ஆக்குவோம்! கடல் கடந்து ஆளுவோம்!
குகை வாயிலைத் தாண்டும் போது . . . . .

(தொடரும்)

நீங்களும் நானும்

ஆர்வி

வ. செல்லப்பன், திருவண்ணமலை

கே: சர்க்காரே இனிப் பாட புத்தகங்களை வெளியிடப் போகிறார்களா? ஏன்?

ப: அப்படித்தான் சொல்கிறார்கள்; அந்தத் துறையில் ஏதோ ஊழல் இருப்பதால் அப்படி ஒரு யோசனை வந்ததாம். இனிமேல் நீங்கள் எல்லாரும் சரியாகப் படிக்க வேண்டும்; அதிலும் ஏதாவது ஊழல் இருந்ததோ, சர்க்காரே படித்து விடுவார்கள்!

பி. சுப்பராயன், திண்டிவனம்

கே: தென்னிந்திய மொழிகளில் அமெரிக்காவுக்கு என்ன அவ்வளவு அக்கறை?

ப: அதுதான் எனக்கும் தெரியவில்லை. அமெரிக்கப் பணத்தில் ஒரு சிலருக்கு அக்கறை இருப்பது மட்டுமே இப்போது தெரிகிறது. இவர்களுடைய முயற்சியைக் கண்டு வெறுத்தே இந்தியாவும் சியாங் சீனுவைப் போல் ஆகிவிடுமோ என்று பயமாக இருக்கிறது. நம்முடைய ஆன்மீக பலத்தில் நம்பிக்கை வைத்து, பிறர் நம் எளிய வாழ்வில் தலையிடாமல் இருந்தாலே பெரிய உபகாரமாகும்.

ராஜகோபால், மதுரை

கே: 'காமன்வெல்த்' என்றால் என்ன?

ப: சுதந்தரமான பல நாடுகள் சமத்துவமான உரிமைகளோடு அங்கம் வகிக்கும் ஓர் அமைப்பு காமன்வெல்த் என்பது. பல நாடுகளின் ஒற்றுமையிலே சுபிட்சத்தைக் காண்பதும் சுதந்தரத்தைக் காப்பதும் அதன் நோக்கம்.

ம. சங்கரன், திருச்சி

கே: உண்மையான நண்பன் எப்படி இருப்பான்?

ப: நீ நன்றாக இருக்கும்போது நீ வருந்திக் கூப்பிட்டால்தான் வருவான். நீ கஷ்டப்படும்போதோ வலுவிலே வந்து நிற்பான்.

கே. எஸ். சீதாராமன், திருப்பத்தூர். (வ. ஆ)

கே: கெட்டவன் சகவாசத்தால் நல்லவன் கெடுவானா? நல்லவன் சகவாசத்தால் கெட்டவன் திருந்துவானா?

ப: பொதுவாக இரண்டுமே ஏற்படுவதுண்டு. ஆனால் உண்மையில் நல்லவனாக இருந்தால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எந்தக் கெட்டவனையும் திருத்திவிடலாம்.

ந. மதனகோபால், சென்னை-7

கே: தேர்தலில் ஓட்டுப் போட × என்று இந்தக் குறியை ஏன் போடுகிறார்கள்?

ப: ஒரு பத்திரிகையில் வேடிக்கையாகக் குறிப்பிட்டதைப் பார்த்தேன்: 'ஓட்டுப் போட்டது தவறு' என்பதை முன்னாலேயே காட்டுவதற்குத்தானாம்!

வி. ரங்கநாதன், புது டில்லி

கே: உலக நாடுகளுள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எங்கே அதிகம்?

ப: ஜப்பானில்தான் அதிகம். நூற்றுக்கு 98 பேர்கள் அங்கே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

ஆர். கண்ணன், வேந்தன்பட்டி.

கே: நான் மிகவும் பலவீனமாயும் அதிக உயரமாயும் இருக்கிறேன். உயர வளர்ச்சியைத் தடுக்கவும் பருக்கவும் வழியுண்டா? ஒவ்வொரு நாளும் 12 மைல் தூரம் சைக்கிள் பிரயாணம் செய்கிறேன். தேகாப்பியாசமோ ஆசனமோ தேவையா? வயது 18. எடை 90 பவுண்டு. உயரம் 5½ அடி.

ப: தினம் 12 மைல் தூரம் சைக்கிள் விட்டுச் செல்லும் ஒரு

வனுக்குப் பலவீனம் இருப்பதாய்ச் சொல்ல முடியாது. உயரத்துக்குத் தக்க பருமன் வேண்டுமானுல், சாப்பாட்டை அதிகமாக்கிக் கொள்ள வேண்டும். பால் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பி. ஜி. நந்தகுமார், பம்பாய் - 14

கே? பாவலர் பாரதியார் எவ்வாறு காலமானுர்?

ப: திருவல்லிக்கேணிக் கோவில் யானைக்குப் பாரதியார் வழக்கமாகப் பழம் கொடுப்பது வழக்கம். ஒரு சமயம் யானைக்கு மதம் பிடித்து விட்டது. யாரும் அதனை நெருங்கப் பயந்தார்கள். பாரதியார் துணிந்து அதனிடம் பழம் கொடுக்கப் போனுர். மதம் பிடித்த யானை பாரதியாரைத் தாக்கி விட்டது. அதுவே காரணமாகப் பாரதியார் சில நாளில் இறந்தார்.

எஸ். செல்லம், மதுரை

கே: ஆயுள் சந்தா என்ருல் என்ன? பத்திரிகையின் ஆயுள் வரைச் செலுத்தும் சந்தாவா அல்லது சந்தாதாரின் ஆயுள் வரைச் செலுத்தும் சந்தாவா?

ப: எந்த ஆயுள் முன்னுல் முடிந்தாலும் ஆயுள் சந்தா அத்துடன் நின்றுவிடும்.

சம்பு, ஸ்ரீரங்கம்

கே: சரித்திரக் கதைகள் எழுதும் 'சாண்டில்யன்' அவர்களின் இயற் பெயர் என்ன?

ப: எஸ். பாஷ்யம் என்பது. (இது அவருடைய அநுமதியோடு வெளியிடப்படுகிறது)

பி. எம். ரஹீம், மூனுர்

கே: ஆர்வி அண்ணுவே, நீங்கள் ஏன் ஆங்கிலப் பெயரை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

ப: அது ஆங்கிலப் பெயரல்ல, தம்பி! என் பெயரின் முதல் இரண்டு எழுத்தின் சேர்க்கையே ஆர்வமுள்ளவன் என்ற கருத்தைக் குறிக்கிறது. ஆர்வலன் என்ருல் ஆர்வமுள்ளவன் என்று பொருள். ஆர்வி என்பது அதன் மருவுப் பெயர். உன் பெயர்தான் அராபியப் பெயராக இருக்கிறது. கருணையுள்ளவன் என்பதே அதற்குத் தமிழில் பொருள்.

சி. எம். ஓமர்டீன், கொழும்பு - 13

கே: ரஷ்யா அனுப்பியுள்ள செயற்கைச் சந்திரனைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: விசுவாமித்திரர் தம் தவவலிமையினுல் வானில் ஏவி நிறுத்திய திரிசங்கு சொர்க்கம், இனி நம்ப முடியாத வெறும் புராணக் கதை அல்ல என்பதுதான். வால்ட் டிஸ்னியின் 'ஸ்பேஸ் ஷிப்' (Space ship) செய்திப் படத்தைப் பார்த்தால். சூரிய வெளியைத் தாண்டி விட்டால், அது மேல் கீழ் என்பது இன்றி, தெற்கு, வடக்கு, கிழக்கு மேற்கு என்கிற திசைகளின்றி, நிற்க ஆதாரமின்றி எப்படிச் சுற்ற நேரிடும் என்பது தெரியும். ஒரு கிரகத்திலிருந்து மற்ருெரு கிரகத்துக்குப் போகும் காலம் விரைவில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படிப் போனுர்கள் என்று பழம் புராணம் கூறுகிறது. நையாண்டி செய்தோம். அப்படிப் போவார்கள், போகமுடியும் என்று நவவிஞ்ஞான புராணம் உறுதி கூறுகிறது. நம்புகிருேம். இல்லாவிட்டால் நம்மைப் பார்த்து நாலு பேர் நையாண்டி செய்வார்கள்.

கி. ரா. திருமலையப்பன், தென்காசி

கே: உலகிலேயே மிகப் பெரிய கட்டடம் எம்பயர் ஸ்டேட் பில்டிங் என்பதா அல்லது சோவியத் அரண்மனையா?

ப: முன்னுல் சொன்னதுதான்.

பெரிய. நல்லையா, மணக்காடு

கே: சென்னையில் மலிவாகக் கிடைக்கக் கூடியது என்ன?

ப: சொற்பொழிவுகள் தான்; இலவசமாகவே கிடைக்கின்றன.

ஏ. டி. டெனியல், தஞ்சாவூர்

கே: என் நண்பனின் முகத்திலே முகப்பரு போல் முள்ளு முள்ளாக இருக்கிறது. இதற்கு மருந்து ஏதாவது உங்களுக்குத் தெரியுமா?

ப: அது முகப்பருவாக இருந்தால் அதற்கு மருந்து நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பாலிலே வால்மிளகை இழைத்து, அதைத் தூங்கப் போகும்போது பருக்களில் தடவிக்கொள்ள வேண்டும். அது வேறு ஏதாவதாக இருந்தாலும்

இருக்கக்கூடும். ஆகையால் டாக்டர் சிகிச்சை செய்வதே நல்லது.

கே. நாகப்பன், தென்னூர்.

கே: *ராஜாஜியின் பிறந்த நாள் எது என்று அவருக்கே தெரியாது என்கிறார்களே, உண்மையா?*

ப: அப்படித்தான் கேள்வி. ஆயினும் அவர் 1879-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் பிறந்தார் என்று சொல்லப்படுகிறது. அவருடைய பிறந்த நாளை 8-ஆம் தேதியன்று கொண்டாடுகிறார்கள்.

கே: *உங்கள் விடைகளில் சுடச் சுட ஹாஸ்யமும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாமா?*

ப: அதிகச் சூடு விரலைச் சுட்டு விடுமே! கை பொறுக்காத சூடு உள்ளத்தைச் சுடாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டியிருப்பதால் உங்களுக்குத் தெரியவேண்டிய முக்கிய விவரங்களுக்கே முதல் இடம் கொடுத்துவருகிறேன்.

பி. கே. சகுந்தலா, பண்ணுருட்டி

கே: *பிரமிடுகள் என்பவை யாவை?*

ப: ஆயிரக் கணக்கான வருஷங்களாக, எகிப்து நாட்டிலே நீல நதிக் கரையில் நிற்கும் பிரம்மாண்டமான நாலு மூலைக் கற்கோபுரங்கள். பழங்காலத்தில் எகிப்தை ஆண்ட மன்னர்களின் அந்தச் சமாதிக் கோபுரங்கள் மேல் நாட்டாரின் வியப்பையும் கீழ் நாட்டாரின் திறமையையும் வானளாவ அறைகூவிக்கொண்டு நிற்கின்றன. கற்பனைக்கும் எட்டாத அந்தக் கோபுரங்களுக்குள்ளே விலை மதிப்பற்ற பொன்னும் மணிகளும் மரகதமும் மாணிக்கங்களும் சமாதி வைக்கப்பட்டிருந்தன. அதைக் கொள்ளையிடப் போனவர்கள் எத்தனை எத்தனை பேர்களோ அதனுள் சென்று ஆயிரக்கணக்கான அறைகளிலிருந்து வெளியில் வர வழி தெரியாமல் மாண்டுபோயினர். தற்செயலாகப் பலர் மீண்டு வந்து, கொண்டும் போயினர். சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே ஐயாயிரக்கணக்கான அடிமைகளைக் கொண்டு கட்டி எழுப்பிய அந்தக் கற்கோபுரங்கள் புராதனகால மனிதனின் பெருமையை இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் ஆனாலும் அறிவிக்கும் அதிசயமாகத் திகழும்.

சிவ. ஜகதீசன், திரிகோணமலை.

கே: *ஏழு வர்ணங்களில் கறுப்பு வர்ணம் ஏன் சேர்க்கப்படவில்லை?*

ப: கறுப்பு ஒரு தனி வர்ணம் இல்லை. அது கலப்பு வர்ணங்களால் ஆனது. வான வில்லில் ஏழு வர்ணங்களே உள்ளன. அவைதான் ஒளியின் ஏழு முகங்கள். உலகப் பொருள்கள் யாவும் அந்த ஒளியின் கலவைகளே!

ஆர். ராஜசேகரன், மதுரை.

கே: *ஏழைகள் மலிந்த நாடு எது?*

ப: ஏழைகள் மலிந்த நாடு இந்தியாதான். ஏழைகளே இல்லாத நாடும் இந்தியாதான். பொருள் செல்வம் நமக்கு இல்லாத போதிலும் அருள் செல்வம் நிறைய இருக்கிறது. செல்வத்தைச் சேர்ப்பதைவிட செல்வத்தைத் துறப்பதே பெரிதாக எண்ணுபவர்களை இங்கேதான் அதிகம் காணலாம். குடிசைகளில் வாழ்ந்து வானளாவும் உயர்ந்த நோக்கங்கள் கொண்டவர்கள் இந்தியர்கள். வானளாவிய மாளிகைகளாக எழுப்பி, குறுகிய எண்ணங்கள் படைத்தவர்கள் இந்த நாட்டில் குறைவு.

க. ஆறுமுகம், நாமக்கல்.

கே: *உலகில் பண ஆசையே இல்லாதவர்கள் யார்?*

ப: எல்லாருக்குமே அநேகமாகப் பண ஆசை உண்டு. ஆனால் எல்லாருக்குமே அதை அடையும் வழிதான் தெரிவதில்லை.

பரமேசுவரன், புத்தூர்.

கே: *கடவுள் இருக்கிறார் என்றால், அவருக்கு இறப்பு என்பது உண்டா?*

ப: உண்டு; மனிதர்களுக்குப் பிறகு. உலகத்தில் கடைசி மனிதன் உள்ள வரையில் கடவுள் இருந்துகொண்டுதான் இருப்பார்.

வாண்டுகள் படும் பாடு!

தஞ்சை குருமூர்த்தி

கல்யாண வீடு என்ருல், என்னைப் போன்ற வாண்டுப் பயல்களைச் சும்மா விடுவார்களா, என்ன? ''டேய் வாண்டு! வாசல்லே இருந்து நாலு விறகு கொண்டு வந்து கொடுத்துட்டு, அந்த உக்கிராண அறைக்குப் போய் இரண்டு படி உப்பும் நாலு படி பருப்பும் இரண்டு வீசை ஜீனியும் ஒரு வீசை புளியும் வாங்கிண்டு, அப்படியே கொஞ்சம் வெற்றிலை, சீவல், புகையிலை, சுண்ணும்பும் நான் கேட்டேன்னு கேட்டு வாங்கிண்டு வாடா!'' என்று சரமாரியாகப் பணிக்கணைகளைப் பொழிவார் சமையல்கார சாம்பு மாமா. அதுவும் மிக மிகப் பாத்தியப்பட்டவர்போல! முடியாது என்று முகத்தைக் கொஞ்சம் சுளித்தால் போதும். ''டேய்!.. டேய்!...போடா..சாப்பிடும்போது உனக்கு எல்லாம் டபில் பங்கா பரிமாறச் சொல்றேன்; போடா.. என் கண்ணோல்லியோ..'' என்று கொஞ்சிக் குழைவார்.

போதாக்குறைக்கு, ''ஏண்டா! நீ சாமண்ணுவின் பேரனுடா?'' என்று உறவு விசாரிக்க வேறு ஆரம்பித்துவிடுவார். இவ்வளவும் அந்த விறகையும், மற்றச் சாமான்களையும் அவரிடம் கொண்டு போய்க் கொடுக்கும் வரையில்தான். பிறகு போய் ஏதாவது கேட்டால் ஜாரணிக் கரண்டியைத் தூக்கிக் கொண்டு அடிக்க ஓடி வருவார்!

அங்கிருந்து தப்பினோம், பிழைத்தோம் என்று வாசலுக்கு ஓடிவந்தால் மாப்பிள்ளை வீட்டாரின் மனிதர்களாகிய சம்பந்திகள் திண்ணையில் சீட்டுக் கச்சேரியின் ஆக்ரமிப்பில் மூழ்கியிருப்பார்கள். அவர்கள் பார்த்துவிட்டால் போதும்; சம்பளம் கொடுக்கும் வேலைக்காரர்களை அதிகாரம் செய்வது போல, ''டேய்! பொடியா! உள்ளே போய் ஒரு செம்பு ஜலமும் ரெண்டு விசிறிகளும் கொண்டாடா'' என்று அதட்டுவார்கள்.

போகட்டும் என்று அந்த விசிறிகளையும் தண்ணீரையும் கொண்டு வந்தால், அதோடு விடுவார்களா என்ன? ''டேய் அம்பி! எங்கேடா அதுக்குள்ளே ஓடறே? கொஞ்ச நேரம் விசிறிட்டுப் போடா, அம்பி! ராத்திரி எல்லாம் ரெயிலில் வந்த அலுப்பு ஒரே களைப்பா இருக்கு'' என்று கெஞ்சிக் காக்காய்ப் பிடிப்பார்கள்.

அந்தச் சனியன்கள் எப்பொழுதுடா ஒழிவார்கள் என்று கால்கள் கடுக்க அங்கே தவம் கிடக்க வேண்டும். கொஞ்சம் அப்படி இப்படி என்று நகர்ந்தாலோ அந்த எமகாதகர்கள், ''டேய்! டேய்! என்ன, மெதுவா நழுவறே? ஏன் கை வலிக்கிறதா?'' என்று உத்தர விடுவார்கள்.

நம் கால்கள் வலி எடுக்க நாம் எவ்வளவு

விசிறினாலும் அவர்களுக்கு ஆனந்தமாகத்தான் இருக்கும். சில சமயங்களில் அசந்து மறந்துபோய் அவர்கள் தலைமேல் விசிறி இடிக்கும். அவர்கள் நாலு சாத்துச் சாத்துவார்கள். ‘நரிக்குக் கொண்டாட்டம்; நண்டுக்குத் திண்டாட்டம்’ என்பது போல் நம் அவதி அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது? பாவம்! சுகவாசிகள்! இப்படியாக மனிதன் பிராணனை வாங்கி விடுவார்கள்.

அப்பாடா.....விட்டது சனியன் இனிமேலாவது ‘பொண்ணு மாப்பிள்ளை’யைப் பார்க்கப் போகலாம் என்று மணப்பந்தலுக்குப் போனால் நாசமாய்ப் போன வேலை அங்குமா வந்து தொலைய வேண்டும்? கோடி வீட்டுக் கோமளம் மாமி, ‘‘டேய் கோண்டு! இந்தக் குழந்தையைக் கொண்டு போய் எங்க வீட்டிலே விட்டுவிடுடா’’ என்று அதிகாரத் தோரணையில் பணி ஏவுவாள். அந்த மாமியின் பேச்சைத் தட்ட முடியாது; ஏன் என்றால் அந்த மாமியின் கணவர்தான் என் வகுப்பு உபாத்தியாயர்.

முடியாது என மறுத்துக் கூறினாலோ மறுநாள் வாத்தியாரிடம் ஒன்றுக்கு இரண்டாகக் கோள் மூட்டி முதுகைப் பழுக்க வைப்பாள். படிப்புச் சொல்லித் தருவது முன்பின் இருந்தாலும் வேலை வாங்குவதில் மகா தீரர்கள், என் வகுப்பு உபாத்தியாயரும் அவர் மனைவியும்.

அத்தனை நாழிகை பேசாமல் இருந்த பாழாய்ப் போன குழந்தை என்னிடம் வந்தவுடன்தான் அலற வேண்டுமா? கல்யாண வீட்டில் குழந்தையை அழவிட்டால் சும்மா இருப்பார்களா? ‘‘எலே! போடா வெளியே, இங்கே வந்து குழந்தையை அழவிட்டுண்டு! நீங்களெல்லாம்கல்யாணத்துக்கு வரல்லேன்னு யார் சொல்றா? போடா வெளியே’’ என்று எரிந்து விழுவார்கள்.

இதற்கு நடுவில் வாசலில் பீப்பாய் வண்டியில் உள்ள தண்ணீரை உள்ளே அண்டாக்களில் கொண்டு போய்க் கொட்டுவது, கடை வீதிக்குப் போய்வருவது, தெருவில் கல்யாணத்திற்கு வராதவர்களைப் போய் அழைத்து வருவது, கல்யாணத்திற்கு வந்தவர்களுக்குச் சிசுருஷை செய்வது போன்ற பல காரியங்களும் வந்து உயிரை வாங்கும்;

கல்யாண வீடுகளில் சண்டைகள் நிகழ்வது சகஜம். சண்டைகள் இல்லாத கல்யாணம் உலகில் கிடையாது என்று அநுபவம் மிக்கப் பெரியவர்கள் சொல்லுவார்கள். ‘‘என்னடா, பெண் வீட்டுக்காரர்கள். என்ன சீர்வரிசைகள் செஞ்சுக் கிழிச்சுட்டா, ஒண்ணுமில்லே, ஒரு சாப்பாடு டிபன் விஷயமாவது யாராவது கவனிச்சானாகளா?’’ என்று பெண் வீட்டுக்காரர்மீது பழியைப் போட்டு, போர் முரசு கொட்டுவார்கள் சம்பந்திகள். இது பெண்ணின் தகப்பனார் காதுக்கு எட்டும். அவர் காதுக்கு எட்டும்படியாகத்தானே, இவர்களே சொல்வார்கள்! இதைக் கேட்டுவிட்டு அவர் சும்மா இருந்தாலும் அவர் மனைவி சும்மா இருப்பாளா?

‘‘ஏன்னா! நன்னா இருக்கே! அவா அப்படிச் சொன்னான்னு நீங்க இப்

படி இடிச்ச புளிமாதிரி உட்கார்ந்திண்டிருக்கேளே? நாம் அவாளுக்கு எவ்வளவு செஞ்சிருக்கோம்'' என்று வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்குக் கிளம்புவாள். இப்படியாக வார்த்தைகள் முற்றி ஒருவருக்கொருவர் சண்டைப் பிடித்துக் கொள்வார்கள். இதற்கு நடுவில் நாம் அகப்பட்டுக் கொண்டால் நம் பாடு சட்டினிதான்.

இவ்வளவு கஷ்டப்படுகிறோமே, அந்தக் கல்யாண வீட்டில் நமக்குச் சாப்பாடு ஒழுங்காகக் கிடைக்கும் என்று நினைக்கிறீர்கள்? அதுதான் கிடையாது. 'குழந்தைகள்தானே! இரண்டாவது பந்தியில் போட்டால் போதும்' என்று சொல்ல முன் வருவார்கள், சில சாப்பாட்டுராமன்கள். அந்தக் கல்யாண வீட்டுக்காரர், ''ஏன் சார், குழந்தைகளை விரட்டுகிறீர்கள்? டேய்! பசங்களா நீங்க போய் முதல் பந்தியில் சாப்பிடுகிறவர்ளுக்கு ஜலம் கொடுங்கோடா'' என்று சிபார்சு செய்வது போல் ஒரு வேலையைத் தூக்கித் தலையில் போடுவார்.

[illegible] கொடுப்பதென்பது சாமான்ய காரியமா என்ன? 'கங்காமிருதம், தங்காமிர்தம்!' என்று தொண்டை வறளக் கத்த வேண்டும். இதற்குள் அந்தக் கோடியிலிருந்து, 'ஜலம் வேண்டும்' என்று கத்துவார் ஒருவர். மற்றொரு மூலையிலிருந்து புரை ஏறியவர்போல் இருமுவார் இன்னொருவர், வேண்டுமென்றே விக்குவார் மற்றொரு மகாநுபாவர். ''டேய்! பிராணன் போகிறது. சீக்கிரம் கொடுடா'' என்று அவஸ்தைப் படுவார் ஒரு ஜலப்பிரியர். இவ்வளவையும் சமாளிப்பதற்குள் மனிதன் உயிர் மேல்லோகத்திற்குச் சென்று நன்றாகச் சுற்றிப் பார்த்துவிட்டுத்தான் திரும்பும்.

இத்தனையும் ஆச்சே! அந்த இரண்டாவது பந்தியிலாவது ஒழுங்காகச் சாப்பாடு கிடைக்குமா என்ன? அதுவும் கிடையாது. பெரிய கூடத்தில் இலை போட்டிருப்பார்கள். அதில் போய் ஆசையாய் உட்கார்ந்தால், ''டேய்! அது பெரியவர்களுக்குப் போட்டிருக்கு. நீங்க போய் ரேழியில் உட்காருங்கோ'' என்று சொல்லுவார் பரிமாறுபவர். ரேழிக்குப் போகும் சமயம் பார்த்து அவருக்கு வேண்டாதவர்களாக இருந்தால் பிடித்து வெளியே தள்ளுவதும் உண்டு.

குழந்தைகளுக்கு ஒரு அப்பளம், போட்டால் போதும் என்று சொல்வார்கள். சாப்பிடும்போது சாம்பார் வேண்டும், வடை வேண்டும் பாயசம் வேண்டும் என்று தொண்டை கிழியக் கத்தினாலும் கொண்டுவந்து போடமாட்டார்கள். ''ஏண்டா வீச்..வீச்சுன்னு கத்துகிறீர்கள்?'' என்று எரிந்துவிழுவார்கள்.

இதை நன்றாக உணர்ந்த நம்மைப் போன்ற சில வாண்டுகள் தங்கள் வீட்டில் உள்ள வற்றல் குழம்பும், சுட்ட அப்பளமுமே போதும் என்று இருந்து விடுவார்கள். இல்லாது போனால் இந்தக் கல்யாணக்காரர்கள் பாடு திண்டாட்டம்தான் என்பது நாம் சொல்லித்தான் தெரியவேண்டுமா?

வாண்டுப் பயல்கள் இல்லாத கல்யாண வீடும் பாண்டு வாத்தியம் இல்லாதக் கல்யாணமும் ஒரு கல்யாணமா? சொல்லுங்களேன் பார்ப்போம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் வெளியீடுகள்

தங்க மாம்பழம் - 'ராஜி' ரூ. 2·00

ஒரு சிறுவனும் சிறுமியும் ஒரு மந்திரவாதக் கிழவி வீட்டில் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் கையில் ஒரு தங்க மாம்பழம் கிடைக்கிறது. சிறையிலிருந்து தப்பி, கல்லறைத் தீவுக்குச் செல்ல முயல்கிறார்கள். கிழவியும் வீரப்பதேவன் என்பவனும் இதைத் தடுக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் இருவரும் மந்திரக் குதிரைமீது ஏறி மேலே பறந்து செல்கிறார்கள். சிறைக் கூண்டு கற்கண்டுக் கூண்டாக மாறுகிறது. பல திடுக்கிடும் சம்பவங்கள் கொண்ட அதிசய மான கதை.

சைனு சு-சூ! - ஆர்வி ரூ. 1.50

பிளாட்பாரத்திலே பத்திரிகைகள் சுமந்து விற்ற பையன், குடிசையிலே அநாதையாக வளர்ந்த பையன், ஒரு நாள் திடீரென்று பெரிய கோடீசுவரருடைய உயிரைக் காப் பாற்றப்போய், அவனே கோடீசுவரனாகவும் ஆகிறான். ஆனால் பிச்சைக்காரன் பிரபுவாக விளங்குவது அத்தனை உல்லாசமாக இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் அவன் அநுபவம் கூறுகிறது. அவனுடைய உயிருக்கே ஆபத்து நேருகிறது. 'சைனு சு-சூ!' என்ற மர்மப் பை ஒன்றும் மற்றும் பல மர்மங்களும் அடங்கிய இந்தக் கதை முதலிலிருந்து கடைசிவரையில் சுவாரஸ்யமாகவும் விறு விறுப்போடும் செல்கிறது. ஆயிரக்கணக்கான குழந்தை கள் விடாமல் விரும்பிப் படித்த அருமையான கதை. நடு நடுவே அழகான படங்கள்.

மஞ்சள் பங்களா - ஜி. ஜயராமன் ரூ. 1·00

சதிகாரர்களிடையே இரண்டு சிறுவர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்களைச் சிறைப் பிடித்துக் கொல்லவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் இரண்டு சிறுவர் களும் புத்தி வன்மையினாலும் சாமர்த்தியத்தினாலும் சதி காரர்களைக் கண்டுபிடித்து, காரியத்தையும் சாதித்துக் கொள்கிறார்கள். கடைசி வரி வரையில் விறுவிறுப்பும் பிர மிப்பும் உண்டாக்குகிற கதை.

புலிக்குட்டி - சித்திரக் கதை - ஆர்வி: ஸாமி ந. பைசா 40

அரசனிடம் விரோதம் கொண்ட வீரன் அரசன் மகனையே தூக்கிச் சென்று வளர்த்து, அரசன்மீதே பகைமை பாராட் டும்படிச் செய்கிறான். புலிக்குட்டி என்றால் நாடே கலங்கு கிறது. கண்ணனில் தொடர்ச்சியாக வெளிவந்த அருமை யான சித்திரக் கதை.

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5